
# திருக்கோயில்



னவரி 2002

விலை
ரூபாய் ஐந்து



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் இசைக்கலைஞர் மற்றும் காவலர் குடியிருப்பு திறந்து வைத்தல், திருமண மண்டபம் கால்கோள் விழா, கருமாரி தங்கும் விடுதி புதுப்பிக்கும் விழா மற்றும் கடைநிலை ஊழியர் குடியிருப்பு விரிவாக்கப்பணி துவக்க விழா திருக்கோயில் இணையதள தொடக்க விழா ஆகியவை 5.12.2001 அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.சி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில் நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன், பி.காம்., பி.எல். அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத்துறை அரசுச் செயலர் திருமிகு பி.ஏ. இராமய்யா, இ.ஆ.ப. அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு பி. சிவசங்கரன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்ஸி., பி.எல். அவர்களும், திருக்கோயில் இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

திருக்கோயில் வாசகர்களுக்கு

**2002 புத்தாண்டு**

மற்றும் **பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**



# திருக்கோயில்



திங்கள் இதழ்


தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - தை சனவரி 2002 | மணி 1



சிறப்பாசிரியர்

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**திருநீர்மலை அருள்மிகு நீர்வண்ணப்பெருமாள்**

## பொருளடக்கம்


கல்வெட்டுக்களில் நால்வர்
- பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

சேந்தனாரும் திருவாதிரை திருவிழாவும்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

புத்தாண்டில் புத்துணர்ச்சி பெறுவீர்
- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

குமரமலை தண்டாயுதபாணி திருக்கோயில் தல வரலாறு
- எஸ். முருகேசன், பி.ஏ., எஸ். மைதிலி, பி.லிட்.

ஸ்ரீகுபேரலட்சுமிபூஜை - கவிஞர் பவானிதாசன்

பாம்பன் சுவாமிகள் - சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்

முருகவேள் பன்னிருதிருமுறை
- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

தட்சிணாமூர்த்தி திருவருட்பா – விரிவுரை
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

திருக்கள்ளில் திருப்பதிகம் – சித்தாந்தரத்தினம் த. ஆறுமுகம்

பாம்புக்கு பரிவு காட்டிய பக்தர் - புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ. பிஎட்.,

தாயே சரணம் - கவிஞர் ச.க. ஏகாம்பரம்

நூல் நயம் – நிறைமதி



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :



உயர்திரு ஆணையாளர் அவர்கள்

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407



# கல்வெட்டுக்களில் நால்வர்

**- தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

உலகெங்கிலும் அருளாளர்கள் கடவுளை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். அத்தகைய வழிபாட்டில் தம் தாய்மொழியால் போற்றியுள்ளனர். எண்ணும் எழுத்தும் சொல்லுமாகவுள்ள அம்முதற்பொருளை அனைத்து மொழியாலும் போற்றலாம். எல்லா மொழியும் அவருக்குச் சொந்தம். வழிபடும் மக்கள் தம் மன உணர்வை எளிதில் வெளிப்படுத்துவது அவர்களது தாய்மொழியிலேயாகும். பல மொழிகளிலும் காலத்தால் மூத்த மொழி நமது மொழி. இது உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது. பல்லாயிரம் ஆண்டுகளாக இலக்கண இலக்கியச் சிறப்புக்களை உடையது தமிழ்.

வழிபாட்டுணர்வுடன் வளர்ந்த மொழி தமிழ். காலத்தொடு கற்பனைகடந்த கருவூலத்துப் பழம்பாடல்களையுடையது; நிறைபழுத்த துறைத் தீந்தமிழின் சுவையாகக் கடவுள் விளங்குகிறார் என்பார் குமரகுருபரர்.

தமிழில் மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் மொழியும், தேனூறும் வாசகமாய் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க உதவும் திருவாசகமும் நமது மறைமொழிகள்; ஆகமச் செறிவுடையவை. இவற்றை அருளியவர்கள் நால்வர்கள். இவர்களது, திருநெறிய தமிழ், வல்லவர்களுக்கு தொல்வினை எளிதாகத் தீரும். தொல்லை வல்வினை தொந்தம் அகலும். நல்வாழ்வருளும். ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாக அறை கூவி வீடருளும் சிறப்புடையது மாதவம் செய்த தென்திசை வளம் பெற்றது.

நால்வர்களது பாடல்கள் அலகில் செழுந்தமிழ் வழக்கே, அயல் வழக்கின்துறை வெல்ல வழிவகுத்தன. செந்தமிழ் நெறியே சிவநெறி என்பதை உலகறியச் செய்த இப்பாடல்கள் ஆறாம் நூற்றாண்டில் எழுந்தவை. இவற்றை அருளியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளாளர்கள் ஆவர். இவர்கள் வரலாறுகள் சமய இலக்கியங்களாகிப் போற்றிப் பாடல்களாக வெளிவந்தன. வான் பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளலாக நூண்டு சுடர்ராகச் சோதியாகி பழமைமிகு தேவர்கட்கெல்லாம் ஒளிப்பொருளாய் காண்டற்கரிய கடவுளாக, அன்பால் உளத்தில் கருதுபவர்களுக்கு எளிதில் தோன்றுபவராக வேண்டுவார் வேண்டுவது அருளும் வள்ளலாக மெய்நெறிகாட்டி விரதங்களால் தூய்மை பெற்ற அருளாளர்கள் மனதில் நீங்காது இருக்கும் மெய்ப்பொருள் எனப் போற்றிய திருமுறைப்பாடல்கள் மக்களிடையே பத்தியுணர்வை வளர்த்தன. திருமுறைப் பாடல்கள் வழிபாட்டிற்கு உரியவாயின. மன்னர்கள் செந்தமிழ்ப் பாடல்களைப் பேணினர். தெய்வத் தமிழ்ப் பாடல்கள் பெற்ற திருத்தலங்கள் பெருமைக்குரியனவாயின. பண்ணார் செந்தமிழால் பாடும் சிறப்பினைப் பெற்றன.

இத்தலங்களில் கற்கோயில்களும் கலைக்கோயில்களும் உருவாயின. வள்ளல்களும் மன்னர்களும் சிற்ப ஓவியங்கள் சிறந்த மண்டபங்கள், கோபுரங்கள் ஆகியவற்றை உருவாக்கினர். பண்ணிடைத் தமிழாகப் பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும் இறைவனை, நாளும் திருமுறைப் பாடல்கள் ஓதி வழிபட நிவந்தங்கள் ஏற்படுத்தினர். நால்வருக்காக தனிக் கோயில்களை அமைத்தனர். வழிபாட்டுக்குரிய பலவும் வழங்கினர். அவை நிலையாகத் திகழ்வதற்குப் பொன்னும் பொருளும் வழங்கினர், என்பதைப் பல திருக்கோயில் கல்வெட்டுகளில் அமைத்தனர். மக்களிடையே இவர்கள் அருள்பண்பு பரவிய பிறகு சில நூற்றாண்டுகட்குப் பின் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளன. தமிழ் மன்னர்கள் ஆட்சி நிலைத்திருந்த காலத்து இவைகள் தோன்றித் திருநெறிய தமிழ் மரபை வளர்த்துள்ளன என்பதை 12-ஆம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களில் அறியலாம். அயல் மரபுக்குரிய ஆட்சிகள் நுழைந்தபின் அம்மரபு பேணப்படவில்லை என்பதை நாம் உணர வெளிப்படுத்தியவர், வரலாற்றுப் பேராசிரியரும் சைவநெறியாளரும் செந்தமிழ்ப் பற்றாளருமாகிய கோவை கிழார் கோ.ம. இராமச்சந்திரன் செட்டியார் ஆவார். இவர் தமிழகத் திருக்கோயில்களின் சிறப்பை ஏழு தொகுதிகளாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இவை அறநிலையத் துறை மூலம் வெளிவர வேண்டும். கல்வெட்டுப் பேராசிரியர் கோவை கிழார் அரிதின் முயன்று 'நால்வர்களும் கல்வெட்டுக்களும்' எனும் நூலை உருவாக்கியுள்ளார். நால்வர்கட்குத் தனியாக கோயில் எடுத்துள்ளமையை ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். நால்வர்களை எழுந்தருளச் செய்துள்ளவற்றையும் வழிபாட்டிற்காக பொன் நிலமாகிய நிவந்தங்களை ஏற்படுத்தியிருப்

# திருக்கோயில் இதழுக்கு வாழ்த்து

அறநிலையத் துறை சார்பாய் திருக்கோயில் எனும் இதழாய் அன்பர்க்கின்பச்
சிறப்பினைத் தந்தாசிரியர் முயற்சியினால் செய்திகளை சேரக் காண்போம்
இறவாத புகழுடைய தமிழ்ப்பாடல் இறைவனது திருவுளத்திற்கு இனிதாகும்
புறநெறிகள் தமைப் போக்கப் புத்தாண்டில் பொலிவுறவே வாழ்த்துகின்றோம்

இத்துடன் கட்டுரையும், அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் அருட்திருநீறும் இணைத்துள்ளோம்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள,

**தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்.**
பேரூராதீனம்.

பதையும் நுணுகி ஆய்ந்துள்ள பாங்கு வியந்து போற்றுதலுக்குரியது. நால்வர்கள் பெயரால் தமிழகத்தில் பல திருமடங்கள் இருந்தன என்பதை ஆய்ந்து தற்போது அவை முழுதும் மறைந்தன என்பதைத் தெரிவித்ததுடன், செந்தமிழ் சிவநெறி சாராத அரசாட்சிகளில் ஏற்பட்ட குறைபாடுகளையும் தெரிவித்துள்ளார். பல மக்கள் நால்வர்கள் பெயரைத் தங்களுக்குச் சூட்டி மகிழ்ந்த செய்திகளைக் கல்வெட்டுக்களில் ஆய்வு செய்துள்ளார். இன்னும் வெளிவராத கல்வெட்டுக்களை ஆய்ந்து வெளியிட்டால் பெரும் பயன் விளையும்.

ஆனால் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக ஆய்ந்த கல்வெட்டறிஞர்களிடமிருந்து இவர்களைப் பற்றிய செய்திகள் வெளிவந்ததாக அறிய முடியவில்லை. நமது செந்தமிழ் நெறியாகிய சைவத் திருமறைகள் செம்பொருள் காண்பார்க்கும் திருத்தலங்களில் பூக்கைக் கொண்டு பொன்னடி போற்றுவோர்க்கும் பூவொடு நீர் சுமந்தேத்திப் புகுவார்க்கும் வழி காட்டுவன.

நால்வர்கட்குத் தனிக்கோயில் இருந்தன என்பதையும், நால்வர் மீது மக்களுக்கு இருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்தும் கல்வெட்டுக்கள் பல உள்ளன. நால்வர்களது திருக்கோயில் வழிபாட்டு நெறிமுறைகளுக்கு நிலக்கொடை, பொன், பொருளாகிய நல்கிய செய்தியை இக்கல்வெட்டுக்களில் காண்கிறோம். திருமேனிகளை எழுந்தருளச் செய்த செய்திகளைக் கல்வெட்டுக்களின் மூலம் அறிகிறோம்.

சமய அன்பர்கள்

''பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால்
எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனமேல்
ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால்
இன்பம் ஆவார்;
இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ
அடைவாய்''

என்ற பெரிய புராணப் பாடலின் சிறப்பை உணர்ந்து போற்றினர் என்பதை அறியலாம். நால்வரைப் பற்றிப் பெரிய புராணம் கூறும்,

''மதிவளர் சடைமுடி மன்றுளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூயசொன் மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.''

என்ற சேக்கிழார் அருள்வாக்கைப் பொன்னே போல் போற்றிய மரபினரது பத்திமையை உணரலாம்.

அலகில் செழுந்தமிழ் மரபு தழைத்து ஓங்கிய காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரை எனக் கருதலாம்.

''செந்தமிழர் தெய்வமறைந்தவர் செழு
நற்கலை தெரிந்த வரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்'',
''பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்
நாமடியோம்''

என்ற மறை வாக்குகளும், 'பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்' என்ற மரபு நிலையும், 'போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்' என்பன போன்ற நடைமுறை ஆகமநெறிகளும் இடம் பெறாமல் அயல்மொழி ஆதிக்கம் மேலோங்கியது என்பதைப் பிற்கால ஆட்சிகளின் செயற்பாடுகளால் அறியலாம்.

பழமையான திருமுறை வழிபாடும், சித்தாந்தச் செந்நெறியும் தன்னுரிமை நாட்டில் தழைக்க வேண்டுமல்லவா? மொழியடிமைப் போக்கினை மாற்றியமைக்க சமய உலகம் முன்வர வேண்டும்; தமிழக அரசு மனங்கொள்ள வேண்டும் எனத் தமிழ் மக்கள் விரும்புவது மாறுபாட்டினை நீக்கும் மரபெனக் கொள்ள வேண்டும்.

**திருஞானசம்பந்தர் குறித்த கல்வெட்டுக்கள் நாயனார் ஆலயங்களும், அவைகளுக்கு வழங்கிய கொடைகளும் அவற்றின் காலமும்.**

***1. கி.பி. 1020-ல் இராசேந்திர சோழன் ஏழாம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருவிடைவாயில், சொக்கக் கூத்தர், நாச்சியார், திருஞானம் பெற்ற நம்பி இவர்கள் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து கோயில் பெட்டகத்திலிருந்து திருவுருவங்களுக்குப் பூஜை நடத்துவது பற்றி விளக்குகிறது.

***2. கி.பி. 1033ல் இராசேந்திர சோழர் 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருச்சி திருமழபாடி வைத்தியநாதர் கோயிலில் எழுந்தருளியிருந்த பிள்ளையார் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனார் திருவுருவங்களுக்கு வேண்டுதலுக்காக நெல் அளித்ததைக் குறிக்கிறது.

***3. கி.பி. 1069-ல் வீரராசேந்திரன் ஆறாவது ஆண்டுக் கல்வெட்டு:*** திருக்கழுமல நாட்டுப் பிரமதேயமான ஆளுடைய பிள்ளையார் கோயிலின் தேவ கன்மிகள் திருநாரையூர் நாட்டு வேலூர் ஊரானுக்குத் தம் நிலத்தை மாற்றம் செய்ததைக் குறிக்கிறது.

***4. கி.பி. 1090-ல் சீர்காழி குலோத்துங்கச் சோழன் 17-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** சீர்காழி ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்குக் குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்களத்துச் சபையோர் நாள் வழிபாட்டிற்கும் நந்தவனத்திற்கும் கொடை செய்தது.

***5. கி.பி. 1133-ல் விக்கிரம சோழ தேவனின் 15வது ஆண்டுக் கல்வெட்டு:*** ஆலம்பாக்கம் கைலாச நாதர் கோயிலில் ஆளுடைய பிள்ளையாருக்கு மதுராந்தக சதுர்வேதி மங்களத்துச் சபையோர் நிலக் கொடை வழங்கியது பற்றிக் கூறுகிறது. விக்கிரம சோழனின் இரண்டாம் அரசியான தியாக பதாகை என்ற திரிபுவன முழுதாளுடையாள் என்ற அரசியின் பெயரால் இடப்பட்டது இக்கல்வெட்டு எனத் தெரிகிறது.

***6. கி.பி. 1135-ல் இரண்டாம் குலோத்துங்க சோழனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு:*** சீர்காழி ஆளுடைய பிள்ளையார் ஆலயத்துக்குத் திருக்கழுமலத்துச் சபையார் ஒருநிலம் விற்றது பற்றிக் கூறுகிறது.

***7. கி.பி. 1136-ல் இரண்டாம் குலோத்துங்கன் 4-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருவுருவங்களை எழுந்தருளச் செய்யவும் புதுப்பிக்கவும் நிலக்கொடை வழங்கியது.

***8. கி.பி. 1143-ல் குலோத்துங்க சோழனின் 10-ம் ஆண்டுக் கல்வெட்டு :*** சோழநாட்டு கலைச்சங் காட்டுச் சபையோர் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்கு நாள்வழிபாட்டிற்காகப் பூமி விற்றது.

***9. கி.பி. 1148-ல் இராசராச தேவனின் 2-ம் ஆண்டு கல்வெட்டு :*** சீர்காழி ஆளுடைய பிள்ளையார் ஆலயத்துக்கு கங்கை கொண்ட சோழபுரத்துப் பத்தன் கோயில் திருச்சுற்று திருப்பணிக்காகப் பணம் கொடுத்தது.

***10. கி.பி. 1158ல் இராசராசதேவரின் 12-ம் ஆண்டு கல்வெட்டு :*** திருக்கழுமலம் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்து மங்கையர்க்கு அரசியார் கோயிலுக்கு நாள்வழிபாட்டிற்காக நிலம் விற்றது.

***11. கி.பி. 1182-ல் இராசாதிராசன் 11-ம் ஆண்டுக் கல்வெட்டு :*** ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்கு ஆட்கொண்ட நாயகன் நந்தப் பெருமாள் என்பவன் நாள்வழிபாட்டிற்காக நிலக்கொடை செய்தது.

***12. கி.பி. 1195ல் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் 13-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** சிவசரண சேகர நல்லூர் ஆச்சாபுரத்து ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்காக அக்கிராமத்து அபயமாணிக்கச் சேரியான் ஒருவன் பூமி வாங்கிக் கொடுத்தது.

***13. கி.பி. 1205ல் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 27ம் ஆண்டுக் கல்வெட்டு :*** திருமுல்லைவாயில் நிலங்களை பல தடவைகளில் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்துக்கு வாங்கியவைகளின் விபரம். நாள் வழிபாட்டிற்காக நிலம் கொடுத்தது. 387/

18ல் திருவிசைப்பா கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக நிலக்கொடை கொடுத்தது உரைக்கப்பட்டுள்ளது.

***14. கி.பி. 1206ல் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 28ஆம் ஆண்டுக் கல்வெட்டு:*** சோழநாட்டு சூரலூர் என்ற ஊரான் வாணாதி ராஜன் என்பவன் ஆளுடைய பிள்ளையார் வழிபாட்டிற்குக் கொடை கொடுத்தது. மேலும் சுங்கம் தவிர்த்த செய்தியையும் கூறுகிறது.

***15. கி.பி. 1219ல் மூன்றாம் இராசராசனின் இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு:*** சோழநாட்டு வெண்ணையூர் சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் ஆளுடைய பிள்ளைக்கும், சொக்கியாருக்கும் நாள் வழி பாட்டிற்காக கைலாசமுடையார் ஆலயத்தில் ஆயிரத்து எண்ணூற்று வன்சந்தி என்ற திருவிழாவில் அபூர்வி களுக்கு உணவு அளிக்கவும் நிலக்கொடை செய்தது.

***16. கி.பி. 1225ல் மூன்றாம் இராசராசனின் 9-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** மன்னார்குடி அருகில் கொழுந் தாண்டார் ஆலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார் கோயிலுக்கு நாகமங்களமுடையான் அம்பலவன் என்ப வன் பணம் உதவியதும் ஒரு பிராமணப்பெண் நிலக் கொடை செய்ததும் கூறுகிறது.

***18. கி.பி. 1234ல் மூன்றாம் இராசராசனின் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு :*** மன்னார்குடி - கோட்டூர் - கொழுந்தாண்டார் ஆலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார் சந்நிதிக்கு நிலக்கொடை செய்தது.

***19. கி.பி. 1240ல் மூன்றாம் இராசராசன் - 14ம் ஆண்டுக் கல்வெட்டு :*** திருநீற்றுச் சோழமங்கலம் காளிங்கராயன் என்பவன் ஆளுடைய நாயனார் ஆலயத் திற்காக 500 பலாப்பழம், 5000 மாம்பழம், 5000 வாழைப் பழம் தந்த செய்தி.

***20. கி.பி. 1267ல் மூன்றாம் இராசேந்திர சோழன் 28ம் ஆண்டுக் கல்வெட்டு :*** பட்டுக்கோட்டை தாலுக்கா கோவிலூர் வியாபாரி அவ்வூர் திருஞானம் பெற்ற பிள்ளையார் நாள்வழிபாட்டிற்காக நிலக் கொடை செய்தது.

***21. கி.பி. 1270ல் மாறவர்மன் வீரபாண்டியன் 8ம் ஆண்டுக் கல்வெட்டு :*** விக்கிரம பாண்டிய காங்கேய ராயன் உத்தரவுப்படி சாலியர் குடியேறிய ஊருக்கு, ''தெரியவர நின்ற பெருமாள்புரம்'' என்று பெயரிடப் பட்டது. அதற்காக சிவகாமசுந்தரிக்கு நான்கு புதுச் சீலைகள் ''திருப்புதியது'' என்ற விழா நாளில் கொடுக்க வும், திருஞானசம்பந்தருக்கு ஐந்து சிற்றாடைகள் கொடுக்கவேணுமென்றும் திட்டம் வகுத்தது.

***22. கி.பி. 1283ல் சடாவர்மன் இரண்டாம் சுந்தரபாண்டியன் 13-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** தென் ஆற்காடு ''அறிந்தவன் பல்லவராயன்'' என்பவர் திருக்கோயிலுக்கு அளித்திருந்த 2000 காசுகளை அவ்வூர் சிவப் பிராமணர்கள் தம்மிடம் வைத்துக் கொண்டு, அதில் வரக்கூடிய வட்டியைக் கொண்டு ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்கு நாள்வழிபாட் டிற்கு கொடுத்தது.

***23. கி.பி. 1296ல் விக்கிரம பாண்டியன் 13ம் ஆண்டுக்கல்வெட்டு :*** திருப்பத்தூர் ஆலயத்து மடைப் பள்ளிச் சுவரில் திருப்பத்தூர் கைலாசமுடையார் ஆலயத்தில் ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்கு நாள் வழிபாட்டிற்குப் பணம் வழங்கியது.

***24. கோனேரின்மை கொண்டான் 21-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருவிடை மருதூர் ஆலயத்துச் சுவர் சாசனம் ஆளுடைய பிள்ளையார்க்கும், ஆளுடைய நம்பிக்கும் நாள்வழி பாட்டிற்கு நிலக்கொடை செய்தது.

***25. கோனேரின்மை கொண்டான் 6-வது ஆண்டுக் கல்வெட்டு:*** சீர்காழி பிரமபுரேசுவரர் ஆலயத் துச் சுவர்: உய்யக்கொண்டார் வளநாட்டு மாத்தூர் கிராமத்து ஒரு நிலத்தை அரசனுடைய உத்தியோகஸ்த ரில் ஒருவனான உய்யவந்தான் இராசவிச்சாதிரி என்பவ னால் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்குப் பூசைக்காகக் கொடை வழங் கியது.

***26. கி.பி. 1341ல் இராஜநாராயணன் சாம்பவ ராயன் 4வது ஆண்டுக் கல்வெட்டு :*** தாவனிப்பாக்கம் என்ற 4 வேலி கொண்ட ஒரு நிலத்தை சீர்காழி சம்பந்தப் பெருமாள் நாயனார் சந்நிதிக்கு பட்ட விருத்திக்காகவும் கோயில் திருப்பணிக்காகவும் வரி யின்றி நிலக்கொடை செய்தது.

**மேற்குறிப்பிட்ட கல்வெட்டுக்களால் அறியப்பெறும் சம்பந்தர் திருக்கோவில்களும், மடங்களும்**

1. திருவிடைவாயில் ஆலயம்
2. திருமழபாடி வைத்தியநாதர் கோயில்
3. திருக்கழுமலம் ஆளுடைய பிள்ளையார் கோயில்
4. ஆலம்பாக்கம் கைலாசநாதர் ஆலயம்

5. சீர்காழி ஞானசம்பந்தர் ஆலயம்
6. கோட்டூர் கொழுந்தாண்டார் ஆலயம்

**சம்பந்தர் மடங்கள் இருந்த ஊர்கள்**

1. காமரசவல்லி
2. திருச்சத்திமுற்றம்
3. திருவானைக்கா
4. குறுக்கை வீரட்டானம்
5. திருப்புத்தூர்
6. திருவொற்றியூர்
7. தென்கரை
8. சீகாழி.

**திருநாவுக்கரசர் பற்றிய கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் :**

***1. கி.பி. 1014 முதலாம் இராசராசன் 29-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** தஞ்சை இராசராசேசுவரம் உடையார் கோயில், அப்பர் முதலிய எழுவர் திரு வுருவங்கள் கோயிலில் நிறுவப்பட்டதையும், கொடை வழங்கப்பட்டதையும் கூறுகிறது.

***2. கி.பி. 1017 முதலாம் இராசேந்திரன் 3-ம் ஆண்டுக் கல்வெட்டு :*** தஞ்சை இராசராசேசுவரம் உடையார் கோயில் அப்பர் முதலிய நால்வர் திருவுருவங் களுக்கு இரண்டு திருவிளக்குகளுக்குகளும் வெண்கல மடல் ஒன்றும் கொடை வழங்கப்பட்டதைக் குறிக் கிறது.

***3. கி.பி. 1158 இராசராசன் 11, 12ம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருவலஞ்சுழி, கபர்தீசுவரர் ஆலயம், திருநாவுக்கரசர், திருவாதவூர் அடிகள், கண்ணப்பர் ஆகியோர் திருவுருவங்களுக்கு நிலக்கொடை செய்யப் பட்டதைக்குறிப்பிடுகிறது.

***4. கி.பி. 1178-1216 மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு:*** அழிந்து போயிற்று. செங்கல் பட்டு, திருக்கச்சூர் ஆலயத்து அஞ்சனாட்சி அம்மன் ஆலயத்தில் அப்பருடைய திருவுருவம் நிறுவியதைக் குறிக்கிறது.

***5. கி.பி. 1192 வீரராசேந்திர சோழர் 14-ம் ஆண்டுக்கல்வெட்டு :*** சித்தூர் அகத்தியர் கொண்டா எனும் ஊரில் உத்தமசோழகங்கை என்ற செல்வகங்கை என்பவள் திருநாவுக்கரசரின் திருவுருவத்தை நிறுவி யதைக் குறிப்பிடுகிறது.

***6. கி.பி. 1255 மூன்றாம் இராசேந்திரன் 10ம் ஆண்டுக் கல்வெட்டு :*** தஞ்சை, கோவிலூர் மந்திர புரீசுவரர் கோயிலில் சம்பந்தர், திருநாவுக்கரசர் இவர் கள் கோயில்களுக்கு நிலக்கொடை செய்தது குறிப்பிடு கின்றது.

***7. கி.பி. 1267 சடாவர்மன் வீரபாண்டியன் 14ம் ஆண்டுக் கல்வெட்டு :*** திருநெல்வேலி - சேரமாதேவி அப்பர் ஆலயத்தில் உள்ளது.

***8. கி.பி. 1271 மாறவர்மன் வீரபாண்டியன் 9-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** தென் ஆற்காடு தீர்த்தநகரி - சிவாங்குரேஸ்வரர் கோயிலில் திருநாவுக்கரசர் திரு விழா உட்பட 12 திருவிழாக்களுக்கு வரிகளைக் கொடை செய்தது குறிப்பிடப்படுகின்றது.

***9. கி.பி. 1295 விக்கிரம பாண்டியன் 12-ம் ஆண்டுக்கல்வெட்டு :*** இராமநாதபுரம் - திருப்பத்தூர் ஆலயம் கைலாசமுடையார் கோயிலில் திருநாவுக் கரசர் திருவுருவை ஒரு தேவரடியாள் நிறுவி, பணம் வழங்கியது கூறுகின்றது.

***10. கி.பி. 1396 சடாவர்மன் பராக்கிரமன் 12-ம் ஆண்டுக் கல்வெட்டு :*** தஞ்சை சூலமங்கலம் கிருத்திகேசுவரர் ஆலயம் தான் வினோத நல்லூர் திரு வுடையான் என்பவன் கரியுரித்த நாயனார் ஆலயத் தில் திருநாவுக்கரசரின் திருவுருவம் நிறுவியதைக் குறிப்பிடுகிறது.

**திருநாவுக்கரச நாயனார் திருமடங்கள் ஆறு இடங் களில் அமைந்து இருந்தன. அவை,**

1. திருப்பராய்த்துறை
2. திருவீழிமிழலை
3. திருஅதிகை
4. திருவான்மியூர்
5. திருக்குறுக்கை
6. பூதக்குடி

**சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிய கல்வெட்டுக்களில் இடம் பெறும் செய்திகள்**

***1. அவிநாசி முதலாம் சுந்தரபாண்டியத் தேவர் 31-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** திருப்புக்கொளியூரில் குளக்கரையின் மீது அரசனால் நிறுவப்பட்ட சுந்தர நாயனார் கோயிலுக்கு நெல்லுக்காக பாண்டி மண்டலத்து கீழ்வழிநாட்டு அரணையூர் என்ற சீவல்ல புரத்து வியாபாரியால் பொன் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

***2. அவிநாசி வீரபாண்டியன் 14-ம் ஆண்டுக் கல்வெட்டு:*** பார்ப்பாரப்பூண்டி என்ற வீரராசேந்திர நல்லூர் குடிகள் தென்பள்ளியில் இருந்த சுந்தரநாயனார் ஆலயத்திற்கு நெற்கொடை அளித்தது. (கி.பி. 1279) கூறுகின்றது.

***3. ஆரகலூர் 3ம் குலோத்துங்கன் 29ம் ஆண்டுக் கல்வெட்டு :*** அப்பர், சுந்தரர், சம்பந்தர் சேவைக்காக 5000 காசு கொடை வழங்கப்பட்டது (கி.பி. 1206) கூறுகின்றது.

***4.திருவிடைமகுதூர் கோனேரின்மை கொண்டான் 21ம் ஆண்டுக் கல்வெட்டு :*** சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவர் வழிபாட்டிற்காக நிலக்கொடை செய்த செய்தி கூறுகின்றது.

***5. தஞ்சை 1014 இராசராசதேவர் 29ம் ஆண்டுக் கல்வெட்டு : 1017 கி.பி. 3ம் இராசேந்திரன் கல்வெட்டும்*** சுந்தரர் திருவுருவிற்கு பீடம், காறை முதலியவை வழங்கப்பட்டது கூறுகின்றது.

***6. கி.பி. 995 கும்பகோணம் இராசகேசரி வர்மன் 10ம் ஆண்டுக் கல்வெட்டு :*** சுந்தரர் கோயிலில் சித்திரைத் திருவிழாவிற்கு நிலக்கொடை செய்தது கூறுகின்றது.

***7. கி.பி. 1021 பனையவரம் இராசேந்திர சோழன் 8வது ஆண்டுக் கல்வெட்டு :*** சுந்தரருக்கும், பரவையாருக்கும் நந்தாவிளக்கு கொடை செய்யப்பட்டது கூறுகின்றது.

***8. கி.பி. 1130 2ம் குலோத்துங்கன் கல்வெட்டு*** திருவாரூர் சுந்தரருடைய தாயார் இசைஞானியார் பிறந்த இடம் திருவாரூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், மூவர்முதலிகளுக்கு வழிபாட்டிற்காக கொடை வழங்கப்பட்டது கூறுகின்றது.

**கல்வெட்டுக்கள் கூறியுள்ளதன்படி எட்டு இடங்களில் இவருக்குத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. அவை,**

1. அவிநாசி
2. தென்பள்ளி
3. ஆரகலூர்
4. திருவிடைமருதூர்
5. தஞ்சை
6. குகூர் (கும்பகோணம்)
7. பனையவரம்
8. திருவாரூர்

**மாணிக்கவாசகர் பற்றிய கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள்**

***1. கி.பி. 1148 மருதநல்லூர் இராசராச சோழன் 2ம் ஆண்டுக் கல்வெட்டு :*** குலோத்துங்கச் சோழவள நாட்டுத் திருநாறையூர் நாட்டுத் திருக்கருக்குடி விழுமிய நாயனார் ஆலயத்தில் தேவரடியாளான கறையேறவிட்டாள் திருநட்டப் பெருமாள் என்பவள், தான் நிறுவிய மாணிக்கவாசகரின் வழிபாட்டிற்காக நிலக்கொடை செய்தது கூறுகின்றது.

***2. திருவலஞ்சுழி கி.பி. 1158 இராசராசதேவச் சோழன், 11 மற்றும் 12ம் ஆண்டுக் கல்வெட்டுகள்:*** கபந்தீசுவரர் ஆலயம் முன்மண்டபத் தென்சுவரில் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் திருநாவுக்கரசர், திருவாதவூரடிகள், கண்ணப்பர் ஆகியோர்களின் வழிபாட்டிற்காக நிலக்கொடை செய்யப்பட்டது கூறுகின்றன.

***3. கி.பி. 1167 சோழன் இராசாதிராசதேவன் கல்வெட்டு :*** வீரட்டானேசுவரர் ஆலயம் முன் மண்டபத்துச்சுவரில் உள்ளது. ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் திருவாதவூரின் சந்நிதியில், மார்கழி மாதம் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதுவதற்கும், பங்குனித் திருவிழா நடத்துவதற்கும் ஒரு அன்பன் பணம் கொடை செய்தது கூறப்படுகின்றது.

***4. கி.பி. 1181 3ம் குலோத்துங்கசோழன் 3ம் ஆண்டுக் கல்வெட்டு:*** வழுவூர் மேற்கல்வெட்டில் கூறிய அன்பனே திருவீரட்டானமுடையார் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் வாதவூரர் வழிபாட்டிற்காக ஒரு நிலத்தை வாங்கி அளித்தது கூறப்படுகின்றது.

***5. கி.பி. 1226 இராசராசதேவன் 11ம் ஆண்டுக் கல்வெட்டு :*** திருவீழிமிழலை வீழிநாதசுவாமி கோயில் முதல் பிரகாரத்துத் தென்சுவரில் உள்ளது. மாணிக்கவாசகரின் திருவுருவிற்கு வழிபாட்டிற்காக நிலக்கொடை அளித்தது.

***6. கி.பி. 1305 சன்னவனம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் 38ம் ஆண்டுக் கல்வெட்டு*** சாலயவனேசுவரர் ஆலயம் முன்மண்டபத்துத் தென்சுவரில் உள்ளது. இக்கல்வெட்டில் சுந்தரபாண்டிய பட்டன் என்பவன் அவ்வூராலயத்தில் நிறுவிய மாணிக்கவாசகர் திருவுருவிற்கு வழிபாட்டிற்காக வியாதரையன் கோட்டை குடிகள் நிலக்கொடை வழங்கியது கூறுகின்றது.

திருப்பெருந்துறையில் உள்ள திருக்கோயிலில் மணிவாசகருக்கு, வழிபாடும், பெருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுவதையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

★★★

# சேந்தனாரும் திருவாதிரை திருவிழாவும்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''திருவெண்காடர்'' என்ற இயற்பெயர் பூண்ட பட்டினத்தாரிடம் தலைமைக் கணக்கராகப் பணியாற்றிய பெருமை கொண்டவர் சேந்தனார். இவர் பிறந்தவூர் திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூர் ஆகும். ஆகவே இவர் பிறந்த ஊர்ப் பெயருடன் சேர்த்து இவரை ''நாங்கூர்ச் சேந்தன்'' என்றும் வழங்குகின்றனர்.

மெய்ப்பொருள் உணர்வு இன்றிப் பொய்ப் பொருள் நாட்டமே அன்று மிகுந்திருந்த திருவெண்காடரிடம் சேர்க்குமாறு கூறி, அவருடைய திருமகனார் மருதவாணர் ஒரு சிறு பெட்டியைத் தம் தாயாரிடம் கொடுத்து, மறைந்து விட, திருவெண்காடர் அச்சிறுப் பெட்டியைத் தம் மனைவியிடம் இருந்து வாங்கிப் பார்த்தார். அப்பெட்டியினுள் காதற்ற ஊசி ஒன்றும் ''காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே'' என்று எழுதப்பட்டிருந்த ஓலை ஒன்றும் இருந்தது. அப்பொழுது தான் பட்டினத்தாருக்கு எது மெய்ப் பொருள் எனும் ஞானம் உண்டாகிச் ''செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே'' என்ற தெளிவினைப் பெற்றார்.

தம் தலைமைக் கணக்கர் ஆன சேந்தனாரை அழைத்து ''இங்குள்ள செல்வம் அனைத்தையும் அறம் செய்து விடுக'' என்று பணித்தருளி ஆடை அணிகள் யாவும் நீங்கிக் காசாயம் பூண்ட துறவியானார் பட்டினத்தார் என்பது நாமறிந்த வரலாறு ஆகும்.

பட்டினத்தாரின் தலைமைக் கணக்கராக இருந்த சேந்தனாரும் தம் குருநாதரின் திருவாக்கைத் தலைமேற் கொண்டு, நிதியறையைத் திறந்து, ஏழை எளியோர்கள் எல்லோருக்கும் நிதியைத் தானம் செய்யும் பணியில் ஈடுபட்டார்.

பொருள் பற்று மிகுந்த பட்டினத்தடிகளின் சுற்றத்தார் சோழ வேந்தனிடம் சென்று புகார் கூற, அப்புகாரினை ஏற்று சோழ மன்னனும் சேந்தனாரைப் பிடித்துவரச் செய்து சிறையில் அடைத்து விட்டான்.

நிகழ்ந்ததை அறிந்து கொண்ட பட்டினத்தார் சேந்தனாரை சிறையிலிருந்து விடுவிடுத்தருளுமாறு திருவெண்காட்டு இறைவரை வேண்டிப் பின்வரும் பாடலைப் பாடியருளினார்.

''மத்தளைத் தயிர் உண டானும்
மலர்மிசை மன்னி னானும்
நித்தமும் தேடிக் காணா
நிமலனே! அமல மூர்த்தி
செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச்
சேந்தனை வேந்தன் இட்ட
கைத்தளை நீக்கி என்முன்
காட்டு வெண்காட்டு ளானே''

இப்பாடலைப் பட்டினத்தார் பாடியருள, திருவெண்காட்டுத் தலத்து விநாயகர் தம் தும்பிக்கையை நீட்டிச் சிறைக் கம்பிகளை வளைத்து, சேந்தனாரைச் சிறையிலிருந்து விடுவித்து அருளிய அற்புதம் நிகழ்ந்துள்ளதாக அறிகிறோம்.

இவ்வாறு சிறையிலிருந்து விடுவிக்கப்பெற்ற சேந்தனார் முத்தித்தலமான சிதம்பரத்திற்குத் தம் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார்.

சிதம்பரம் ஒருதரம் தரிசித்தாலும் முத்தி கிடைப்பது நிச்சயம் ஆகும்.

"தில்லை மாநகர் எல்லை காணினும்
என் பொழுதாகினும் உளப்பட நினைக்கினும்
நேசமாகவே நாவினால் பேசினும்
சிதம்பரம் என்றசொல் செவியினில் கேட்பினும்
இறையினைக் கொடுக்கும்
பிறவிச் சாகா கருவடி அறுத்து
திருவடித் தாமரை நிழலில் வாழ்வது நிச்சயமே''

என்று கூறுகிறது சிதம்பர விலாசம் எனும் நூல்.

''பூவுலகக் கயிலாயம்'' எனச் சிறப்பிக்கப் பெறும் சிதம்பரத்திற்குத் தம்மனைவி மக்களுடன் வந்து நடராசரைத் தரிசித்து மகிழ்ந்த சேந்தனார், தம்

வாழ்க்கைக்கான தொழிலாக ஏற்றுக் கொண்டது விறகு வெட்டி விற்கும் எளிய தொழிலாகும். ஒவ்வொரு நாளும் தமக்குக் கிடைக்கும் குறைந்த வருமானத்திலும் ஒரு சிவனடியாரை உண்பித்துப் பிறகு மிஞ்சுவதைத் தம் குடும்பத்தாருடன் உண்பதை வழக்கமாகக் கொண்டு, ஒரு சிறந்த சிவனருட் செல்வராக வாழ்ந்து கொண்டு இருந்தார் நம் சேந்தனார்.

'அவ்வாறு வாழ்ந்து வரும் நாளில், சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரை விழா வந்தது.

சிவபெருமானுக்கு உகந்தது மார்கழியில் வரும் திருவாதிரை விழா என்பதால் 'ஆதிரை முதல்வன்' எனவும் 'ஆதிரையான்' எனவும் சிவபெருமான் வழங்கப் படுகின்றார்.

ஆதிரைத் திருவிழா சிவபெருமானுக்கு உகந்த பழமையான திருவிழா என்பதைப் பரிபாடல் என்ற சங்க இலக்கியமும்

''மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க''

எனக் கூறிச் சிறப்பிப்பதைக் காணலாம்.

உலகெங்கும் திருவாதிரைத் திருவிழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது என்பதைத் திருநாவுக்கரசு பெருமானும்

''ஊர் ஒழியாது உலகம்
எங்கும் பணிந்தேத்தும
ஆரூரன்தன் ஆதிரை''


என்று உறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினைத் திருஞானசம்பந்தரும் திருமயிலைத் திருப்பதிகத்தில்

''ஊர்திரை வேலை உலாவும்உயர் மயிலை
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியா பூம்பாவாய்''

எனப் பாடிச் சிறப்பித்திருப்பதைக் காணலாம்.

இருபத்து ஏழு நட்சத்திரங்களில் சிவபெருமானுக்கு உகந்தது திருவாதிரை நட்சத்திரம். திருமாலுக்கு உகந்தது திருவோண நட்சத்திரம். இறைவருக்கு உரிமை



உடையதான இவ்விரு நட்சத்திரங்கள் மட்டுமே ''திரு
எனும் அடைமொழியுடன் வழங்கப்பட்டுவரு
சிறப்பு உய்த்து உணர்ந்து மகிழத்தக்கது.

ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், எண்ண
உலகங்கள் ஆகியவற்றைப் படைத்தும், காத்து
அழித்தும், மறைத்தும், அருளல் புரிந்தும் அளவில
திருவிளையாடல்கள் புரிந்துவரும் சிவபெருமா
ஒரே ஒரு ஆதிரை நட்சத்திரத்துடன் மட்டும் இணை
''ஆதிரையான்'' எனப் புகழ்வது என்ன நியாய
என்று வினவுவதாகப் பாடப்பட்டுள்ள மிகப் பழ
யான முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்றும் இங்
குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

''மன்னும் கனலி மதி நாண்மீன் என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனை - இன்னமும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரை வேலி உலகு''

என்ற அப்பாடல், அனைத்தும் ஆண்டவன
படைக்கப்பட்டது ஆயினும் மாதங்களில் சிற
மார்கழியில் பௌர்ணமியுடன் தொடர்பு உடை
ஆதிரை நட்சத்திரம் சிவபெருமானைப் போல்
வண்ணம் (மஞ்சள் கலந்து செந்நிறம்) கொ

புவனுடன் சார்த்திக் கூறும் அளவிலாப் பெருமை டையது ஆகும் என்பதை நமக்கு நன்கு உணர்த்து ின்றது.

திருவாதிரைத் திருநாளில் தில்லையம்பலக் த்தனின் திருநடனத் திருக்கோலத்தையே மெய்யன்பர் ள் கண்டு ஆனந்தப் பரவசம் கொள்கிறார்கள். அண்டங் ள் யாவும் அசைவு பெற்று இயங்கும் பொருட்டு, வபெருமான் தானே ஆடல் வல்லவனாக ஆடி )ப்பிரபஞ்சத்தை இயக்குவிக்கின்றான்.

சிவபெருமான் நடராசனாக ஆடல் இயற்றா டில் உலக இயக்கம் இல்லை என்பதையே வனுடைய ஆடல் வல்லான் திருத்தோற்றம் நமக்கு ணர்த்துகின்றது என்பதனைத்

''தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
சாற்றிஇடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

ன்ற உண்மை விளக்கம் என்னும் சைவ சித்தாந்த ன்னூல் நமக்கு நன்கெடுத்து இயம்புகின்றது.

நம் உடலாகிய பிண்டம் இயங்க எவ்வாறு தயத்தின் இயக்கம் இன்றியமையாததோ அவ்வாறே ண்டங்கள் இயங்க நடராசர் திருநடனம் இன்றி மையாதது என்றும், படைத்தல், காத்தல், அழித்தல், றைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள் புரியும் கையிலேயே நடராசப் பெருமான் திருடனம் புரியும் நுவாதிரை விழா மிகமிகச் சிறப்பினைப் பெறு ன்றது என்றும் நமக்கு அருளாளர்கள் தெளிவுபடுத்து றார்கள்.

''வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளர் அண்டம் ஏழாட
பூதங்கள் ஆடப் புவனம் முழுதுஆட
நாதங் கொண்டு ஆடினான் ஞானானந்தக் கூத்தே''

ன்று திருமூலரும், ஆடல் வல்லான் ஆடல் இன்றேல் ண்டமும், பிண்டமும் இல்லை என்றே தெளிவு த்துகின்றார்.

இத்தகைய பெருமைமிகு திருவாதிரைத் திரு ழாவில் கூத்தப் பெருமானுக்கு எளிய களி உணவு டைத்து வழிபடும் வழக்கம் பண்டு தொட்டு இருந்து நகிறது என்றால் அதற்குக் காரணம் ஆனவர் தாம் தியில் சிறந்த நம் சேந்தனார்.

விறகுவெட்டி விற்று வாழும் தம் எளிய வாழ்க்கையிலும், ஒவ்வொருநாளும் ஒரு சிவனடி யாரை உண்பித்த பிறகே உண்ணும் வழக்கத்தைக் கொண்டு இருந்த சேந்தனாரின் அன்பின் ஆழத்தை அவனிக்கு உணர்த்த ஓர் ஆதிரை நன்னாளில் கூத்தப் பெருமானே சிவனடியாராக சேந்தனாரின் குடிலுக்கு எழுந்தருள்கின்றார். தம் பசியை நீக்க அமுது இடுமாறு வந்த சிவனடியார் சேந்தனாரை வேண்ட சேந்தனாரும் தம் கந்தையில் முடிந்துவைத்திருந்த களி உணவினைக் களிப்போடு சிவனடியாருக்கு வழங்கி மகிழ்கின்றார்.

தமக்கு அன்பர்கள் பரிவுடன் படைக்கும் களி யமுதும் திருஅமுது ஆகும் என்பதைப் பாருக்கு உணர்த்திடும் வகையிலும் கூத்தப்பெருமான், திருவாதிரை நன்னாளில் சேந்தனார் தமக்குப் பத்தியுடன் படைத்த களி உணவினைத் தம் திருமேனி முழுதிலும், கருவறை யிலும் சிதறிக் கிடக்குமாறு செய்து ''சேந்தனார் பரி வுடன் தமக்குப் படைத்த களி அமுதினையே இனி திருவாதிரைத் திருநாள் அமுதாக வையம் போற்றி மகிழட்டும்'' என்பதாகத் திருவருள் புரிந்த சிறப்பி னாலேயே திருவாதிரை நாளில் களி அமுது பிரசாதம் களிமிகு பிரசாதமாகப் படைக்கப்பட்டு வருகின்றது.

திருவாதிரைப் பிரசாதமாக களியமுதைக் கூத்தப் பெருமான் கொண்டு மகிழ்ந்த பேரருட் திறத்தைத் திருக்களிற்றுப்படியார் என்னும் சைவசித்தாந்த நன்னூல்

''அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்த சடை
வேந்தனார்க் கின்னமுதம் ஆயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்''

என்று போற்றிப் புகழ்கின்றது.

திருமுறைகள் தொகுத்து வழங்கிய நம்பி யாண்டார் நம்பிகளும் தாம் இயற்றியுள்ள கோயில் திருப்பண்ணியர் விருத்த நூலில்

''பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப்பொலிசெம்பொன்
அம்பலத்து
வேந்தன் தனக்கன்றி ஆட்செய்வ தென்னே
விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழை அன்பாகிய
பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவும் திரு அமிர்து ஆகியதே''

எனத் திருவாதிரை களி அமுதச் சிறப்பைப் போற்றிப் புகழ்ந்திருக்கக் காணுகின்றோம்.



சேலம் அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் ஆகமப் பயிற்சி பெற்ற சைவ, வைணவப் பயிற்சியாளர்களுக்கு சேலம் இணை ஆணையாளர் திருமிகு ச. இளங்கோ, பி.ஏ., பி.எல். அவர்கள் சான்றிதழ் வழங்குகிறார்கள்.

திருநாளைப் போவாரைப் போல நம் சேந்தனாரும் எளிய குலத்தில் பிறந்தவரே ஆனாலும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் மெய்ம்மை உணர்த்தும் நம் கூத்தப் பெருமானும் சேந்தனாரின் அன்பின் பெருக்கை அவனி அறியும் வகையில் திருஅமிர்தாகக் களி அமுதைக் கொண்டு அருளிய இவ்வருள் வரலாறு நமக்கு நன்கு உணர்த்துகின்றது.

மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் இவ்வற்புதம் நிகழ்ந்தேறியதைப் போல, இன்னொரு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தடைப்பட்ட திருத்தேர் சேந்தனார் திருப்பல்லாண்டு பாட, தானே அத்தேர் ஓடி நிலைக்கு வந்து சேர்ந்துள்ள அற்புதமும் நடைபெற்றுள்ளது.

''தேருலாவிய தில்லைக் கூத்தன்'' என்று பாடுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். தில்லையில் நடராச மூர்த்தியைத் தேரின் மீது எழுந்தருளச் செய்து உலாவரச் செய்வது அந்நாள் வழக்கம். அவ்வாறு தேர்த் திருவிழா சிறப்புற நடைபெறும் போது திடீரெனத் தேர் தடைப்பட்டு நின்றுவிட்டது. ஊர் கூடித் தேர் இழுத்தும், தேர் நகரவில்லை. கூத்தப்பெருமான் திருவிளையாடலை என்னென்பது? ''சேந்தன் வந்து திருப்பல்லாண்டு பாடினால் திருத்தேர் ஓடும்'' என அசரீரி எழுந்தது.

அடியவர்கள் சேந்தனாரைத் தேடி ஓடினர் சேந்தனாரும் விரைந்து ஓடி வந்து திருத்தேர் முன்நின்று ''திருப்பல்லாண்டு'' பாடினார்.

''மன்னுக தில்லை! வளர்க நம்
பத்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே''

சேந்தனார் பாடியுள்ள ''திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளது. திருபல்லாண்டில் 13 திருப்பாடல்கள் உள்ளன.

திருக்கோயில்களில் தினமும் பஞ்சபுராண ஓதும் போது இத் ''திருப்பல்லாண்டி''ல் இருந்து ஒ பாடல் நிச்சயம் பாடப்பெறுதல் வேண்டும் எ ஆன்றோர்கள் வரையறை செய்து இருப்பதை கொண்டு இத் திருப்பல்லாண்டின் இன்றியமையா பெருஞ் சிறப்பினை நாம் நன்கு உணரலாம்.

★★★

# புத்தாண்டில் புத்துணர்ச்சி பெறுவீர்

- மயிலை ஓம். சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

ஓம்! ஓம்! ஓம்!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

திருக்கோயில் வாசக அன்பர்களுக்கு, எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்

ராகம் :- பூபாளம் தாளம் :- ஆதி

**பல்லவி**

புத்தாண்டில் புத்துணர்ச்சி பெற்றிடுங்கள்
புதியதோர் வாழ்வினை அமைத்திடுங்கள்

**அனுபல்லவி**

புத்தாண்டில் விழிப்புணர்ச்சிக் கொண்டிடுங்கள்
புனிதமாம் குணங்களை வளர்த்திடுங்கள் /புத்/

**சரணம் - 1**

புனித குணம் கொண்ட புனித மனிதனுக்கு
புலனாவான் பரமன் புலனாவான்
புனிதம் இல்லாப் பாபச் செயல் செய்யும் மனிதனுக்கு
புலனாகான் பரமன் புலனாகான் /புத்/

**சரணம் - 2**

புத்தாண்டில் கோடி இன்பம் கொண்டிடு கொண்டிடு
பண்பையும் பக்தியையும் வளர்த்திடு வளர்த்திடு
புத்தாண்டில் புது நலன்கள் பெருக்கிடு பெருக்கிடு
சித்தம் மகிழ்ந்திடு பொறுமையில் சிறந்திடு
/புத்/

**சரணம் - 3**

புத்தாண்டில் புத்துணர்ச்சி பெற்றிடு பெற்றிடு
சித்தத்தின் மாயத்திரை விலக்கிடு விலக்கிடு
புத்தாண்டில் புத்தொளியைப் பெற்றிடு பெற்றிடு
சித்தத்தில் ஞானமுத்தைத் தேடிடு தேடிடு /புத்/

★★★

புத்தாண்டில் மக்கள் யாவரும் புதியதோர் வாழ்வினை அமைத்திடுங்கள். புத்துணர்ச்சி பெற்று புதிய புத்தொளிப் பெற்றிடுங்கள். அன்புடன் பழகிடுங்கள். அறங்களை வளர்த்திடுங்கள். ஆன்ம நேயம் மனித நேயம் கொண்டிடுங்கள். இரக்க குணம் கொண்டு, இனிமையாக இதமாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். பல அரிய உதவி செய்யும் இனிய நாவால் நட்பு உறவாக பேசக் கற்று கொள்ளுங்கள். இல்லறம் காத்திடுங்கள். இன்பமாய் வாழ்ந்திடுங்கள். ஈகை குணம் கொண்டிடுங்கள். ஈசனைத் துதித்திடுங்கள். உண்மை பேசுங்கள். ஊக்கம்மிகக் கொண்டிடுங்கள். எளிமையாய் இருந்திடுங்கள். எக்கணமும் விழித்திருங்கள். அறியாமை இருளை அகற்றிடுங்கள். அறியாத அனைத்தையும் அறிந்திடுங்கள். படிப்பறிவால் பகுத்தறிவை மிக வளர்த்திடுங்கள். இறையருளில் ஞானத்தை வளர்த்திடுங்கள். ஒற்றுமையாய் வாழ்ந்திடுங்கள். சொல்லும் செயலும் ஒன்றாகி இறைவனின் அன்பினைப் பெற்றிடுங்கள். அன்பு என்பது நமது மதமே. எம்மதமும் இங்கு சம்மதமே. அளவு கடந்த தூய்மையாம் அன்பு, எல்லை இல்லா தெய்வத் தன்மையாகும். அதனால் அன்பினை வளர்த்திடுங்கள். அன்பற்ற பேச்சில் அன்பற்ற சேவையில் தெய்வீகத் தன்மை இல்லை. அன்புமயமாக்கி கடமையைச் செய்யில் தெய்வீகத் தன்மை இல்லை. அன்புமயமாக்கி கடமையைச் செய்திடும், பக்குவமாகும் தெய்வீகக் குணம் கொண்டிருங்கள்.

புத்தாண்டிலாவது மனிதன் திருந்தி நல்ல மனிதன் ஆனால், புதியதோர் நல்ல உலகம் ஆக்கிடலாம். மனிதன் திருந்தினால் நன்மைகள் பிறக்கும். நாடும் வீடும் சிறக்கும். மனிதன் எம்மதமும் சம்மதமாய் எண்ணி, உலகில் எவ்வுயிரும் தன்னுயிராய் மதித்து, எல்லாஉயிர்களின் உணர்வுகளையும் உணர்ந்து மனிதன், இந்தப் புத்தாண்டில் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்று எண்ணிடும் இலட்சியம் கொண்டால், புத்தாண்டில் புதிய திருப்பமாக மனிதனின் வாழ்க்கை சிறக்கும். மனிதன் திருந்தினால் விதியையும் திருப்பி வந்த வழியே அனுப்பிவிட முடியும். விதியை மதியால் வென்று விடமுடியும்.

மனிதர்களே! புத்தாண்டில் புத்தொளிப் பெற்று, மனித நேயம் ஆன்ம நேயம் வளர்த்திடுங்கள். உயிர்களை நேசிக்கும் உயர்ந்த உள்ளம் மனிதப் பிறவியில் தான். உயர்ந்த குணமும், ஒழுக்க உள்ளமும் மனிதப் பிறவியில்தான். சிந்திக்கும் திறமையாம் சிறப்பினைப் பெறுவதும் மனிதப் பிறவியில்தான்: சிந்தனை, சொல், செயல் ஒன்றாக இருத்தலும் மனிதப்பிறவியில் தான். அதனால், புத்தாண்டில் இத்தகைய சிறந்த குணங்களினால், விழிப்புணர்ச்சிப் பெற்று, துன்பத்தினில் துவண்டு விடாமல் துள்ளி எழுந்திடுங்கள்.

★★★

நல்ல குணங்களும் பக்தியும் மனப்பக்குவமும், ஆன்மீக சிந்தனையும் மனிதனை மிகஉயர்த்தும். மனிதனாகப் பிறந்தவனுக்கு மனிதாபிமானம் வேண்டும். பிறர் நலனுக்காக வாழ்ந்திடுங்கள். மன அமைதியை நாடாத மனிதன் உண்டா? இவ்வுலகில், மனதில் நிம்மதி அமைதியை மனிதன் பெற்றிடவும், அறியாமை என்னும் இருள் நீக்கி, அறிவொளி பெற்றிடவும், மனிதாபிமானம், மனித நேயம், ஆன்ம நேயம் இவைகளை உணர்த்தி, அடியேன் இறைவனருளில் அறிவுரைகள் கூறுகின்றேன். ஒவ்வொரு மனிதனும் புத்தாண்டினில் திருந்தி நல்லவனாகிப் புதிய மனிதனாக வாழ்ந்து மனித நேயம் வளர்க்கணும். மதவெறியைத் தவிர்க்கணும். மனிதருள் சிறக்கணும்.

ராகம் :- தர்பாரிகானடா தாளம் : ஆதி

**பல்லவி**

மனித நேயம் வளர்ப்போம்
மத வெறியைத் தவிர்ப்போம்
மனிதராய் இருப்போம்
மனிதருள் சிறப்போம்.

**அனுபல்லவி**

மனிதனை மனிதன் / மனிதனாக மதித்து
மத வெறியைத் தவிர்ப்போம்
மனித நேயம் வளர்ப்போம் /மனித/

**சரணம் - 1**

சிந்திக்கும் திறமையே தனி சிறப்பு
சிந்திக்காதவன் மனிதன் இல்லை
சிந்தித்து செயலாற்றும் திறமை பெற்ற மனிதன்
சிந்தித்துச் செயலாற்றி மதவெறியைத்
தவிர்ப்போம்.

**சரணம் - 2**

மனிதனை மனிதன் மனிதனாக மதித்தால்
மனிதருள் மிகவும் மதிக்கப் படுவான்
மனிதன் மனிதனுக்கு உதவிடும் குணம் கொண்டால்
மனிதருள் மிகவும் சிறந்தவனாவான்
மனித குணத்தினின்றும் சிறிது விலகி நின்று மனிதன்
பரமனின் குணம் கொண்டு பரமன்
குழந்தை ஆவான் /மனித/

★★★

மனிதன் மனிதனை மனிதனாக மதித்து, மனிதனின் மனதைக் கவர்ந்திடுங்கள். மனித நேயத்தால், ஆன்ம நேயத்தால், மலையான ஆண்டவன் மனதினையும் அசைத்துக் கவர்ந்திடுங்கள். ஆண்டவனின்



அருளைப் பெற்றிட, ஆண்டவனை அடைந்தி ஆன்மநேயம் வளர்த்திடுங்கள். மானுடத்தை வெல் தற்கு மனிதஜாதி ஒன்றே என்ற மனித நேய வளர்த்திடுங்கள். ஆன்ம நேயத்தால், மனித நேயத்தா மகா ஜோதியாம், பரஞ்ஜோதியுள் கண்டு கலக் முடியும்.

புத்தாண்டில் மனிதன் புத்துணர்ச்சியுடன் பு தொளி பெற்று, புதிய மனிதனாகி அடியேன் கூறி அறிவுரைப்படி நடந்தால், உலகில் புதிய திருப்ப உள்ளதாகி வாழ்வில் அமைதி உண்டாகும். வீடு நாடும், உலகமும் சிறக்கும். உலக மக்கள் அமை யாம் இன்பம் பெறலாம். இதுபோன்று அறிவு கள் இறைவனருளில் அளவில்லாமல் கூறுவே ஆனால்,

எத்தனைதான் உரைத்தாலும்
இத்தனை உபதேசமும்
அத்தனையும் கேட்பவர்க்கே ஞானத்தங்கமே
இத்தனையும் ரசிப்பவர்க்கே ஞானத் தங்கமே
இத்தனையும் ருசிப்பவர்க்கே ஞானத் தங்கமே
ஞானத் தங்கமே!

சுவயம்பு ஜோதியான சுதந்திர ஜோதியே
சுவயம்புவான உன்னை வையகமும் பெறவேண்டு
யான் பெற்ற இன்பம் இந்த வையகமும்
பெறவேண்டும்!

ஓம்! ஓம்! ஓம்!

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

★★★

குடிகாக்கும் குமரமலையானே போற்றி போற்றி!

# புதுக்கோட்டை திருக்கோயில்களைச் சார்ந்த அருள்மிகு குமரமலை தண்டாயுதபாணி திருக்கோயில், தல வரலாறு

- எஸ். முருகேசன், பி.ஏ.,
எஸ். மைதிலி, பி.லிட்.

"வண்ணமயில் ஏறிவரு வேலாயுதக் கடவுள்
மலைமேல் உகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமரம் ஆகினோன்
வானவர்கள் சேனாபதி
கன்னல்மொழி உமையாள் திருப்புதல்வன்
அரன்மகன்
கங்கை பெற்றருள் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுள் ஆவினன் குடியினான்
பன்னரிய புல்வயலில் வால குமரேசர் மேல்
பரிந்து குருபாத தாசன்"

"குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்" என்ற வாக்கின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, குமரமலை, காஞ்சாத்து மலை போன்ற பல ஊர்களில் குமரன் கோயில் கொண்டுள்ள போதிலும் பழனி திருக்கோயில் போல் அதே கோலத்துடன் கோயில் கொண்ட குமரமலை மிகச் சிறந்த பிரார்த்தனை தலமாக விளங்குகிறது.

இத்தல வரலாற்றினை எழுதும்போது பார்வை நூலாக வழிகாட்டிய 1.1.1984-ல் புதுக்கோட்டை தெய்வீகப் பேரவையினரால் வெளியிடப்பெற்று குமர மலை பாமாலை என்ற நூலாசிரியருக்கு நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடிகாக்கும் குமரமலையானின் திருவருளால் இந்த தல வரலாற்றினை எழுதுவதும் பெரும்பேறாகக் கருதி இறைவனடி பணிகின்றோம்.

## திருக்கோயில் பற்றிய குறிப்பு

| | | |
|---|---|---|
| இறைவன் | : | அருள்மிகு தண்டாயுதபாணி |
| தலைமரம் | : | சுங்கம் செடி |
| தலைச்சிறப்பு | : | சிறந்த பிரார்த்தனைத் தலம் |
| விழாக்கள் | : | 1. தைப்பூசம் - பத்து நாள் திருவிழா |
| | | 2. பங்குனி உத்திரம் |
| | | 3. மாதந்தோறும் சஷ்டி விழா |
| | | 4. திருக்கார்த்திகை |

சுற்றுக்கோயில்கள் : 1. குடுமியான் மலை அருள்மிகு குடுமிநாதர் திருக்கோயில்
2. அன்னவாசல், சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்
3. இலுப்பூர் அருள்மிகு பொன் வாசிநாதர் திருக்கோயில்
4. வயலோகம் அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில்.

## அலுவலகம்


செயல் அலுவலர்
புதுக்கோட்டை திருக்கோயில்கள்
அரசு பொது அலுவலக வளாகம்
புதுக்கோட்டை - 622 001
தொலைபேசி எண். 21084

## திருக்கோயில் வழிபாடு

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற சான்றோர் வாக்கின்படி இனப் பாகுபாடு இன்றி எல்லா வித கவலைகளை மறந்து ஓர் 5 நிமிட நேரமாவது நம் மனதை ஒருநிலைப்படுத்தி ஆன்மாவை தூய்மை பெறச் செய்வது ஆலய வழிபாடு ஆகும்.

## திருக்கோயில் இருப்பிடம்

"குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்" என்ற வாக்கிற்கு ஏற்ப குறிஞ்சி நிலக் கடவுளாம் அருள்மிகு குமரன் புதுக்கோட்டை பெருமாநாடு, கொன்னையூர் நெடுஞ்சாலையில் புதுக் கோட்டையிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் எழில்மிகு குன்றின் மீது கோயில் கொண்டுள்ளார். புதுக்கோட்டையிலிருந்து பெருமாநாடு என்ற கிராமத் தின் சாலையில் இருந்து தென்புறம் அலங்கார வளைவு வழியாக சாலையிலிருந்து 2 கிலோமீட்டர் தொலை வில் ஒரு சிறு குன்றின் மீது இக்கோயில் அமைந் துள்ளது.




## திருக்கோயிலின் அமைப்பு

புதுக்கோட்டை பெருமாநாடு, கொன்னையூர் நெடுஞ்சாலையில் பெருமா நாட்டைக் கடந்ததும் சாலையின் தென்புறம் அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் குமரமலை என்ற பெயர் தாங்கிய ஓர் அலங்கார வளைவு அமைந்துள்ளது. அலங்கார வளைவி லிருந்து குமரமலைக்கு செல்லும் சாலையின் இரு ஓரங்களிலும் ஆல மரங்களும், கொன்னை மரங்களும் நம்மை வாவென அழைத்து சற்று இளைப்பாறிச் செல்லத் தூண்டும் வண்ணம் உள்ளது.

அலங்கார வளைவின் வலதுபுறம் கிழக்கு நோக்கியுள்ள சிறியதொரு கோயிலில் குமரன் வள்ளியை மணம்புரிய உறுதுணையாய் இருந்த மூல முதல்வ னாம் அருள்மிகு விநாயகர் தம்மை நாடிவரும் பக்தர் களுக்கு அருள்பாலித்து தம் இளவல் குமரனைக் கண்டு அருள்பெற வழி காட்டுகிறார். இச்சிறு கோயிலுக்கு அருகிலேயே ஓர் ஆறுகால் மண்டபம் ஒன்று கட்டப் பட்டுள்ளது. கால் நடையாக வரும் பக்தர்கள் இதில் சிறிது நேரம் தங்கி இளைப்பாறிச் செல்கின்றனர்.

அலங்கார வளைவிலிருந்து தெற்கு நோக்கி சுமார் ஒரு மைல் தூரம் நடந்த பிறகு மலைக்குச் சென்றடைய மயில் மண்டபத்திலுள்ள மயில், குமரன் இருக்கும் திசையை நமக்கு காட்டுகிறது.

சிறு குன்றின் ஆரம்பத்தில் படி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்படி மண்டபத் திற்கு இடது புறத்தில் பெரிய அரசமரம் ஒன்று நன்ற செழித்து வளர்ந்து குமரனைக் கண்டு அருள்பெற வரு பக்தர்களுக்கு மனம் குளிர நிழல் தந்து கொண்டிரு கிறது. இம்மரத்தின் அடியில் தகரமும், ஓடும் வேய் ஒரு சிறு கோயிலில் குமரக் கடவுளின் மூத்த முதல்வன விளங்குகிற அருள்மிகு விநாயகப் பெருமான் எழு தருளியுள்ளார். இக்கோயிலின் முன்னால் தெளிந்த நிலை ஒன்று உள்ளது. இந்த நீர் நிலையில் இறங் கை கால்களை தூய்மைப்படுத்திக்கொண்டு குமரனி உருவத்தை மனதில் இருத்தி கந்தனின் திருநாம சொல்லிப் படிக்கட்டுகள் வழியாக குன்றின் மேல் நோ செல்லும்போது படிக்கட்டுகளின் வலது புறத்தி பக்தர்கள் தங்கி ஓய்வெடுக்க ஓர் அழகிய எண்து மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குன்றி உச்சியை அடைந்ததும், குன்றின் மேல் எழுப்பப்பட மதில் சுவர் வாயிலை அடைந்தும் வாயிலின் இ பகுதிகளிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள

இடதுபுறம் உள்ள கல்வெட்டில் பழனி அரு மிகு தண்டபாணி தமது பக்தருக்காக இரங்கி இ வந்து கோயில் கொண்ட வரலாறு பொறிக் பட்டுள்ளது.

வலதுபுறம் உள்ள கல்வெட்டில் குருபாதத என்ற முத்துமீனாட்சி கவிராயர் எழுதிய கும சதகத்தின் முதலாவது பாடல் பொறிக்கப்பட்டுள் வாயிலிருந்து உள்நோக்கிச் சென்றால் திருக்கோயி

முன் உள்ள கொடிக் கம்பமும், மயில் மண்டபமும் நம்மை வரவேற்கிறது.

கோயிலின் கருவறையில் அருள்மிகு தண்டபாணி புன்னகை தவழும் முகத்துடன் கையில் தண்டமேந்தி கருணை பொங்கும் கண்களுடன் அருள் பாலிக்கிறார்.

கோயிலின் முன் மண்டபத்தின் தென் மேற்கு பகுதியில் அருள்மிகு விநாயகர், காசிலிங்கோத்பவர், விசாலாட்சி ஆகியோர் காட்சி தருகின்றனர். திருக் கோயிலின் இடதுபுறம் மதில் சுவருக்கு வடக்கில் குன்றின் சரிவில இடும்பன் சந்நிதி அமைந்துள்ளது. கீழ்ப்புறத்தில் மடப்பள்ளி உள்ளது. குன்றின் வலது புறம் உள்ள மலைச் சரிவில படிக்கட்டுகளுடன் கரக்கூரை வேய்ந்த ஒரு மண்டபம் உள்ளது. இம் மண்டபம் அன்னதானக் கூடமாகவும், திருமணக் கூடமாகவும் நிர்வாகத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தென் மேற்கு மூலையில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் வயதுள்ள ஓர் அழகிய மகிழமரம் உள்ளது. வடமேற்கு மூலையில் இதேபோல் சரக் கொன்னைமரம் ஒன்று நிழல் தந்துகொண்டிருக் கிறது. இக்கோயிலின் தல விருட்சம் ''சுங்கம் செடி'' ஆகும். தற்போதுள்ள தீர்த்தத் தொட்டிக்கு அருகில் சுங்கம் செடி புதர் இருந்தது எனவும், தற்போது அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

**சுற்றுக் கோயில்கள்**

இயற்கை எழில் கொஞ்சும் குமரமலையின் மேல் நின்று நோக்கினால் தென்கிழக்கில் சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் தேவர்மலை என்ற சிறு குன்றின் மீது விநாயகர் கோயில் கொண்டுள்ளார். இக்குன்றில் ஒரு சுனையும், சிவலிங்கமும் உள்ளது. இச்சுனையில் நீராடி குகையில் உள்ள சிவலிங்கத்தை வழிபட்டால் மக்கட்பேறு இல்லாதவர்களுக்கு மகப் பேறு கிட்டும் என்று நம்பப்படுகிறது.

**குமரமலை தல வரலாறு**

குமரமலையை அடுத்த குன்றக்குடிப்பட்டி கிராமத்தில் அய்யாசாமி என்றழைக்கப்பட்ட சேதுபதி ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் மீது அளவற்ற பக்தி கொண்டவர். இவர் வருடந்தோறும் பழனிக்குக் காவடி எடுத்துச் சென்று பழனியாண்டவரை வழிபட்டு வந்தார். வயது முதிர்வின் காரணமாக உடல் தள்ளாமை ஏற்பட்டதால் வழக்கம்போல் பழனிக்கு சேதுபதியால் செல்ல இயலவில்லையே என்று மனதில் பெரும் ஏக்கமும், வேதனையுங்கொண்டு மன வருத்தத்தில் பழனியாண்டவனையே தூக்கத்திலும் நினைத்துக் கொண்டு இருந்தார்.

குடிகாக்கும் குமரனாகிய வேலவன் வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளும் அருள்மிகு தண்டாயுதபாணி தன் பக்தரும் மெய்யடியாருமாகிய சேதுபதியின் ஏக்கத்தைப் போக்கத் திருவுள்ளம் கொண்டார். இரவு இம்மெய்யடியாரின் கனவில் தோன்றி இன்று கோயில் கொண்டு இருக்கும் குமரமலைக் குன்றின் மீது உள்ள சுங்கம்செடி புதருக்கு அருகில் தான் வந்து தங்குவதாகக் கூறி தான் வந்ததற்கு அடையாளமாக அந்த இடத்தில் திருநீற்று பை ஒன்றும், உருத்திராட்ச மாலையும், பிரம்பும் காணப்படும் என்று கூறி மறைந்தார். கண் விழித்தெழுந்த இம்மெய்யடியார் மறுநாள் காலையில் குமரமலைக் குன்றின் மேல் ஏறிச் சென்று சுங்கம் புதர் அருகே சென்று பார்த்து தான் கனவில் கண்டவை யாவும் இருக்கக் கண்டு அளவில்லா ஆனந்தம் கொண்டார்.

இம்மெய்யடியார் தொடக்கத்தில் இக்குன்றின் மீது வேல் ஒன்றை பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினார். பிறகு கூரைக் கட்டிடம் ஒன்று அமைத்து அதில் அருள்மிகு தண்டபாணியை வைத்து வழிபட்டு வந்தார். இதுவே தற்போது மெய்யடியார்களின் ஆர்வத்தினாலும், குமரேசனின் பேரருளாலும் வளர்ந்து நல்ல நிலையில் கோயில் அமைந்துள்ளது. மெய்யடியாரின் மெய்வருத்தத்தைத் தீர்க்க பழனியிலிருந்து ஓடோடி வந்து அடியார் இருக்குமிடம் வந்து காட்சி கொடுத்த குமரமலை குமரேசனின் அருளே அருள்!

**திருக்கோயிலின் வளர்ச்சி**

பழனியாண்டவன் குமரமலையில் குடிகொள்வதற்கு காரணமாயிருந்த பக்தர் அய்யாசாமி அவர்களின் மரபில் வந்தவர்கள் இக்குன்றின் மீது நான்கு கால்கள் கொண்ட மொட்டை மண்டபம் ஒன்று எழுப்பி அதில் அருள்மிகு தண்டபாணியை எழுந்தருளச்செய்து சுமார் கி.பி. 1851-ம் ஆண்டு முதலாவதாக திருக்குடமுழுக்கு செய்துள்ளதாக கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மன்னர் மரபினரில் தொண்டைமான் மரபினருக்கு முந்தைய மரபினரான பல்லவ ராயர்களில் ஒருவர் குமரமலையை அடுத்த புல்வயல் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். அப்போது குமரமலை குன்றின் மீது அருள்மிகு தண்டபாணி கோயில் கொண்டுள்ளதைக் கேள்விப்பட்டு இக்கோயிலுக்கு வழிபட வந்தார். குமரமலை குமரேசன் மீது பக்தி வயப்பட்டு இக்கோயிலை விரிவுபடுத்தினார். முன்

மண்டபமும், கோபுரங்களும் எழுப்பி அருள்மிகு விநாயகர், இடும்பன் ஆகியோர்களின் சந்நிதிகளும் எழுப்பி 1898ம் ஆண்டில் முறைப்படி குடமுழுக்கு செய்துள்ளார்.

இதன் பிறகு 1912-ம் ஆண்டில் குமர மலை அருகிலுள்ள கிராமத்தார்கள் குன்றின் மீது படிக் கட்டுகள் அமைத்தனர். மேலும் இவர்களால் பசுமடம் ஒன்றும் சத்திரம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு வழிபாட் டிற்கு பாலும் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. கால மாற்றங்களினால் இப்பசுமடம் இடிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இக்குன்றின் தென்புறம் தகரக்கூரை வேய்ந்த திருமணக்கூடம் கட்டப்பட்டு தற்போது இக்கட்டிடம் நிர்வாகத்தினரால் நன்முறை யில் பேணப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை நகர்வாழ் பக்தர்களால் இத் திருக்கோயிலின் சுற்று மதில் சுவரும், சுற்று சுவரும் படிக்கட்டுகளும் கட்டப்பட்டன. கடியாபட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த பக்தர் ஒருவரால் அர்த்த மண்டபத் தின் படிக்கட்டுகள், நிலை, கதவு, பித்தளைக் கவசம் மற்றும் வெள்ளி மயில் வாகனம் ஆகியன உபயமாக வழங்கப்பட்டுள்ளன.

1963ஆம் வருடம் புதுக்கோட்டை நகர் வாழ் மெய்யன்பர்களால் இத்திருக்கோயில் புதுப்பிக்கப் பட்டு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

1964 முதல் 1974 வரை குமரமலை சுற்று வட் டாரத்திலுள்ள பல மெய்யன்பர்களால் எழில்படி மண்டபம், ஆறுகால் மண்டபம், எழில்மயில் மண்ட பம், அலங்கார வளைவு ஆகியன கட்டப்பட்டு 1978-ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

**காலம்**

குமரமலை குமரன் கோயில் கட்டப்பட்ட காலத்தை அறிவதற்கு குமரமலை இலக்கியங்கள் துணை செய்கின்றன.

கி.பி. 17-ம் நூற்றாண்டில் தோன்றிய நூலான செயங்கொண்டார் சதகம் என்ற நூலில் குமரமலை குமரேச சதகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மற்றொரு நூலாகிய பணவிடு தூதில்

''நல்லிசையராய ரெகுநாதத் தொண்டைமான்
செல்வமிகு செங்கோல் செழித்தோங்க''

என மன்னன் புகழ் கூறப்பட்டுள்ளது. இவர் ஆட்சிக் காலம் கி.பி. 17ம் நூற்றாண்டு ஆகும். இவற்றை யெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இக்கோயில் தோன்றிய காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு எனவும் அய்யாசாமி என்றழைக்கப்படும் சேதுபதி என்பவரே இதைத் தோற்றுவித்திருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது என்றும் முனைவர் மு. அரங்க இராமா னுசம் தெரிவித்துள்ளார்.

**திருவிழாக்கள்**

| | | |
|---|---|---|
| வைகாசி மாதம் | : | விசாகத் திருநாள் படிவிழா |
| ஐப்பசி மாதம் | : | கந்தர்சஷ்டி விழா 6 நாட்களுக்கு மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆறு நாட்கள் சஷ்டி விரதம் இருந்து 6வது நாள் சூரசம்ஹாரத்தன்று விரதம் முடிப்பார்கள். |
| கார்த்திகை மாதம் | : | கார்த்திகை சோமவார விழா - திருக்கார்த்திகை தீபத் திருவிழா திருக்கார்த்திகை அன்று மலை அடி வாரத்திலிருந்து கோயில் வரையி லும், மலையைச் சுற்றிலும் 10,008 தீபங்கள் ஏற்றி வைத்து மிக விமரிசை யாகத் தீபத் திருவிழா கொண்டாடப் படுகிறது. இவ்விழாவில் பக்தர்கள் பெருமளவில் பக்திப் பரவசத்துடன் கலந்து கொண்டு குமரனருள் பெற்றுச் செல்கின்றனர். |
| தை மாதம் | : | தைப்பூசம் 10 நாட்கள் பெருவிழா |
| பங்குனி மாதம் | : | பங்குனி உத்திரம் திருவிழா - 10 நாட்கள் பெருவிழா |
| ஜனவரி மாதம் | : | புத்தாண்டின் முதல் நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் படிவிழா கொண்டாடப்படுகிறது. மாதந்தோறும் கிருத்திகை அன்றும், சஷ்டி அன்றும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றது. |

**குமரமலை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் பேரில் பாடப்பெற்ற இலக்கியங்கள்**

1. குமரேச சதகம்
2. குமரேசர் பணவிடு தூது
3. குமரேசர் நொண்டி நாடகம்
4. குமரேசர் பாமாலை



## 1. குமரேச சதகம்

கி.பி. 16-ம் நூற்றாண்டில் குமரமலையை அடுத்துள்ள கிராமமான திருப்புல்வயலில் பிறந்து கிராம நிர்வாக அலுவலராக பணி ஆற்றிய முத்து மீனாட்சி கவிராயர் என்பவர் குமரமலையானின் மீது அளவற்ற பக்தி கொண்டு குமரேச சதகம் என்ற இலக்கியத்தையும், குமரேசர் பணவிடு தூது என்ற இலக்கியத்தையும் பாடியுள்ளதாகத் தெரிகிறது. இவரே குருபாததாசர் என்றும் அழைக்கப்படுகிறார்.

குமரேச சதகத்தில் நால்வகை வருண இயல்பு களையும் யாருக்கு யார் தெய்வம் என்பதையும் உலக மக்களின் மனது, பண்பாடு, உடல் நலம், வலிமை, மக்களுள் பயனற்றவர்கள், விலங்குகள், அற்பன் ஆகியோர்களை பல்வேறு சான்றுகள் மூலம் உணர்த்தி அறநெறி உணர்வுகளை விளக்கியுள்ளார். இந் நூலாசிரியர் குமரமலை குமரன் மீது கொண்ட அளவற்ற பக்தியினை விளக்குவதாக இந்நூல் அமைந் துள்ளது.

## குமரேசன் பணவிடு தூது

இந்நூலும் குருபாததாசரால் தான் இயற்றப் பட்டிருக்கக் கூடும் என்பதை காப்புச் செய்யுளின் மூலம் தெரிகிறது என்று 'புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்களின் பங்கு' என்ற நூலின் ஆசிரியர் முனைவர் மு. அரங்கராமானுசம் தெரிவித்துள்ளார்.

குமரமலை குமரனிடம் பணத்தினைத் தூது விட்டு அவன் மாலையை வாங்கி வரும்படி கூறு கின்றார். பணத்தின் தன்மையை

"கொடுப்பவர்க்கு முன் நிற்பாய்
ஆசை விடுப்பார் முகத்தில் விழிக்கமாட்டாய்"

என்ற பாடல் வரிகளில் சுட்டிக் காட்டுகிறார்.

## குமரேசன் நொண்டி நாடகம்

இந்நூல் நாடக வடிவில் அமைந்துள்ளது. நொண்டி ஒருவன் குமரமலையான் புகழ் பாடுதலைக் குறிக்கிறது. இதன் ஆசிரியர் பெயர் குறிக்கப்பட வில்லை.

## குமரேசர் பாமாலை

இந்நூல் சா. சீனிவாசன் என்பவரால் அண்மைக் காலத்தில் பாடப்பட்டதாகும். இந்நூல் அறுபது விருத்தப் பாக்களைக் கொண்டுள்ளது.

## பிரார்த்தனைகள்

1. செவ்வாய் தோஷம் உள்ளவர்கள், தங்கள் திருமணம் தடையின்றி நடைபெற குமரமலை வந்து குமரனிடம் வேண்டி விரதம் இருந்து விருப்பம் கை கூடிச் செல்கின்றனர்.

2. பிள்ளைகளுக்கு தோஷம் இருந்து தத்து கொடுத்து மாற்றிக் கொள்பவர்கள் இத்திருத்தலம் வந்து பிள்ளைகளைத் தத்துக் கொடுத்து தோஷம் நீங்கிச் செல்கின்றனர்.

மேலும் பழனி தண்டாயுதபாணி கோயிலுக்கு பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் பழனி செல்ல முடியாத நிலையில் குமரமலை வந்து பிரார்த்தனை களை நிறைவேற்றி செல்கின்றனர். இத்திருத்தலம் சகலதோஷ நிவர்த்தி தலமாகவும், சகல காரிய சித்தி தலமாகவும் சிறப்புற்று விளங்குகிறது.

நாமும் நம் குறைகள் தீர குடிகாக்கும் குமர மலையானை தரிசித்து அருள்பெற்று உய்வோமாக!

★★★

# ஸ்ரீகுபேர லட்சுமி பூஜை

- கவிஞர் பவானிதாசன்

பரம்பொருள் ஒன்று. நாமெல்லாம் பரம் பொருளின் மக்கள். தேவர்கள் என்போர் பரம் பொருளுக்குக் கட்டுப்பட்டவர்களாய், அதன் கட்டளைகளை நிறைவேற்றி உலகுக்கும் உலகிலுள்ள உயிர்களுக்கும் காவலாக விளங்குகிறார்கள்.

தேவர்களில் முக்கியமானவர்கள் திக்குபாலர்கள் எட்டுப் பேர். எட்டு திசைகளிலும் ஒவ்வொருவராக இருந்து கடமைகளைச் செய்கிறார்கள். அந்த எட்டுத் திக்குப்பாலகர்களில் முக்கியமானவர், வட திசையில் இருந்து ஆளும் குபேரர் ஆவார்.

குபேரர் வடதிசையிலுள்ள அளகாபுரிக்கு அரசர். பரமனுக்குரிய கயிலாயமலையை ஒட்டிய பகுதிதான் அளகாபுரி. பரமனால் மிகவும் விரும்பப் படும் பேறு பெற்றவர்.

இலங்கையை ஆண்ட விச்ரவசு என்பவர் இராவணனுக்கும் தந்தையாவார். ஆகையினால் குபேரர் இராவணனுக்குச் சகோதரர் உறவு.

தந்தை விச்ரவசுக்குப் பிறகு இலங்கையைக் குபேர்தான் ஆண்டு வந்தார். 'இயக்கர்' என்னும் தெய்வ கணங்களுக்கெல்லாம் அரசர். மனைவி பெயர் சித்திர ரேகை. அவளைச் சித்திராதேவி என்றும் அழைப்பர். வாளினை ஆயுதமாகவும், குதிரையை வாகனமாகவும் கொண்டவர். 'புஷ்பக விமானம்' என்பது குபேரனுக்கே உரியது. வேதங்களை நன்கு கற்றறிந்தவன். வேதாப்பியாசம் செய்வதில் புகழ்பெற்றவன்.

சகோதரனாகிய இராவணன் போரிட்டு, குபேரரிடம் இருந்து இலங்காபுரியையும், புஷ்பக விமானத்தையும் கைப்பற்றிக்கொண்டான்.

உண்மையும், நல்லொழுக்கமும் கொண்ட குபேரன் சகல செல்வங்களையும் தனக்கு அருள வேண்டும் என்று ஸ்ரீ லக்ஷ்மி தேவியை சிறப்பாகப் பூஜித்து வந்தான்.

ஸ்ரீ லக்ஷ்மி தேவி குபேரனின் பூஜைக்கு மனம் கனிந்து அருள்புரிந்தாள். அதன் பயனாக நிதிகளை எல்லாம் ஆளும்படியான ''நிதிபதி'' என்னும் உயர்ந்த பதவியையும் அளகாபுரியையும் அவன் அடைந்தான். ஸ்ரீ லக்ஷ்மி தேவி குபேரருக்கு அருள்புரிந்த பூஜை தான் ''ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜை''.

பிற்காலத்தில் ''ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜை'' செய்து செல்வச் செழிப்பை அடையும் வழியை நம் முன்னோர்கள் வகுத்துத் தந்தார்கள். அதனால் பலர் குபேர வாழ்வைப் பெற்று வருகிறார்கள்.

திருமலை திருப்பதி வரலாற்றைப் பார்த்தால் கூட குபேரன் அருள்தன்மை நமக்கு விளங்கும்.

திருமகள் நாராயணனைப் பிரிந்து 'பத்மாவதி' என்னும் பெயரில் பூலோகத்தில் இருந்தாள். நாராயணனும் 'ஸ்ரீநிவாசன்' என்னும் பெயரில் பூலோகத்தில் இருந்தார். இந்த நிலையில் ஆகாச மன்னரின் மகளாக இருந்த பத்மாவதிக்கும், திருமகளைப் பிரிந்ததால் ஏழையாக இருந்த ஸ்ரீநிவாச பெருமாளுக்கும் திருமண ஏற்பாடு உண்டாயிற்று. திருமணத்துக்குப் பணம் இல்லாத நிலையில் ஸ்ரீநிவாச பெருமாள் சங்கடப் பட்டார். அதை அறிந்த நாரதர் குபேரனிடம் தூது போய் ஸ்ரீநிவாச பெருமாளுக்கு நிதியுதவி வேண்டினார்.

உடனே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. ஸ்ரீநிவாச பெருமாள் குபேரனிடம் 1 கோடியே 14 லட்சம் பொன் கடன் வாங்கியதாக ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தார். அதற்குச் சிவபெருமானும் பிரம்மனும் சாட்சிகளாக இருந்தனர். பிறகு திருமணம் இனிதே நடந்தேறியது.

குபேரனிடம் தாம் வாங்கிய கடனை அடைக்க ஒரு வழி செய்தார். ஸ்ரீ லக்ஷ்மி தேவியிடம் ''நீ என் பக்தர்கள் செல்வர்களாக வாழ அருள்புரிய வேண்டும். அப்பொழுது நான் அவர்களை ஏதாவது சோதனை செய்து என்னிடம் அழைப்பேன். அவர்கள் அடிக்கடி வருகை தந்து எனக்குக் காணிக்கைகளை அள்ளிப் பொழிவார்கள். நான் அதை எடுத்து இந்தக் கலி காலம் முடியும் வரை குபேரனுக்குக் கொடுத்துக் கொடுத்துக் கடனை அடைத்துவிடுவேன். கடன் அடையும் வரை பூலோகத்தில் இருப்போம். பிறகு வைகுந்தம் போவோம்'' என்றார்.

ஸ்ரீ லக்ஷ்மி தேவியும் இதற்கு இசைந்தார். பக்தர்கள் திருப்பதிக்குப் பெருந்திரளாகச் சென்று காணிக்கைகளை அள்ளிப் பொழிவதற்கு இதுதான் ரகசியம். இன்னும் திருமாலும் திருமகளும் வைகுந்தம் போகாமல் திருப்பதியில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் குபேரர்தான்.

சிறப்புவாய்ந்த ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜை மந்திரத்தைக்கூறிப் பூஜை தொடங்குவோர்க்கு இல்லங்களில் நல்ல நல்ல பலன்கள் நாளும் வந்துகொண்டே இருக்கும். ஆரோக்கிய விருத்தி, ஆயுள் விருத்தி, சந்தான விருத்தி, சகல சௌபாக்கிய விருத்திகளும் தொடர்ந்து செழிக்கும் என்பது முற்றிலும் உண்மையாகும்.

ஸ்ரீலட்சுமி குபேரபூஜை மந்திரம் பின்வருமாறு:

''ஓம் தனபண்டார குபேரசகித
குபேர லட்சுமி நமோநம''

★★★

# பாம்பன் சுவாமிகள்

**- சிவத்தமிழ்குகமணி தெ. தனபால்**

பழங்காலத்தில் மன்னர்கள் விழிப்பதற்கு புலவர்கள் விடியல் சமயத்தில் மன்னன் பெருமைகளை பாடலாகப் பாடினர். இது துயிலெடை நிலை என இலக்கணத்தில் பேசப்பட்டது. காலப்போக்கில் அது பள்ளியெழுச்சியாக உருவானது. அந்தக்காலத்தில் கடவுளுக்கு ஒப்பாக மன்னர்கள்நினைக்கப்பட்டனர்.

பிறகு பக்தி இயக்கம் உருவானபோது சைவ சமயத்திற்கு மாணிக்கவாசகர்சிவபெருமானைப்பற்றிப் பள்ளி யெழுச்சி பாடினார். அன்று முதல் பள்ளியெழுச்சி, திருப்பள்ளியெழுச்சியாக உருவெடுத்தது.


பின்பு வைணவ சமயத்திற்குத் தொண்டரடிப் பொடி ஆழ்வார் ஒரு திருப்பள்ளியெழுச்சி பாடினார். திருப்பள்ளியெழுச்சி என்பதை திரு + பள்ளி + எழுச்சி என்று பிரிக்கலாம். திரு - அடைமொழி (மேலான ஒன்று எனப் பொருள்) பள்ளி - மறைப்பு; எழுச்சி - நீக்கம் அதாவது மறைப்பு நீக்கத்தைத் திரோதான சுத்தி என்று குறிப்பிடுவர்.

திருப்பள்ளியெழுச்சியில் அடியார்கள் பங்கு கொண்டதாக மாணிக்கவாசகர் ''இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'' (4) என்று நயமுடன் வருணித் துள்ளார். ஆகவே சாத்திரம், தோத்திரம் இயற்றியவர்கள், அடியார்களாக முதலில் வாழ்ந்து பின்பு ஞானிகளாக மாறியவர்கள்தான். இதற்குச் சான்றாக மாணிக்கவாசகர் ''பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்'' இதன் பொருள் ''பரபரப்பை அறவே விட்டு உட்காட்சியில் பெருமானை கண்டுணரும் மெய்ஞ்ஞானியர் பலரும்'' என்பது ஆகும். மெய்யடியார்கள் அனைவரையும் இறைவனாக பாவித்து அவர்களுக்குப் பணிவிடை செய்வது நமது மரபு. இப்படி சிறப்பு வாய்ந்த மெய்யடி யார்கள் தங்களின் தவவலிமையினால் பெருமானைக் கண்டு உணர்வதால் அவர்கள் ஞானிகளாக மாறு கின்றனர். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஞானிகள் வேறு, இறைவன் வேறு என்று இல்லாமல் இரண்டறக் கலந்து விடுகின்றனர்.

அந்த வகையில் மனிதனாக பிறந்து ஞானியாக மாறியவர் ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள் ஆவர். இவர் இயற்பெயர் அப்பாவு என்பதாகும். இவர் இராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் பதியில் செங் கமலத்து அம்மையாருக்கும், சாத்தப்பப்பிள்ளைக்கும் ஒரு வெள்ளிக்கிழமை அன்று மங்காப்புகழ்படைக்க அவதரித்தவர் ஆவர். (பிறந்த ஆண்டு - கி.பி. 1850 - 52-ம் ஆண்டுகளில் ஆக இருக்கலாம்) ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் முருக பெருமான் ஒருவனையே ஏக தெய்வமாக கொண்டு வணங்கியவர். சுவாமி அவர்கள் தம்முடைய 13 ஆவது வயதில், சுக்கிரவாரத்தில் சூரியோ தயத்தில் கங்கையை நினைத்து ''கங்கையை சடையில் பதித்து'' என்று முதல்பாடல் பாடப் பின்பு தினமும் ஒரு பாடல் பாடியபின் தன்னுடைய ஆகாரத்தை உட் கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டார். அதன்படி சுவாமிகள் 100 பாடல்கள் முருகனைப்பற்றி இயற்றி னார். சுவாமிகளின் ஆசிரியர் முனியாண்டியா பிள்ளை. முனீஸ்வரனை பற்றிப் பாடுக என்றதும் சுவாமி அவர் கள் முனீஸ்வரனை, முருகனாக பாவித்து குந்துகால் ஊரில் இனிய சந்தத்தில் 5 பாக்கள் பாடியதை கேட்ட ஊர் மக்கள் வியந்தனர். பின்பு சுவாமிக்கு ஸ்ரீமதி காளி முத்தம்மாளை பெரியவர்களின் கட்டளைக்கு இணங்க திருமணம் செய்து கொண்டு 2 மகன்களும், ஒரு பெண்ணும் பிறக்க அப்பாவி அப்பாவாக உயர்வு பெற்றார்.

சுவாமி அவர்கள் தம் வாழ்நாளில் ஆன்ம இலாபம் வேண்டி ஒரு முறை பொய் கூறியதால் பழனி செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதற்காக சுவாமி, செவ்வேள் பரமனின் உளம் குளிர ''சிறுமை நீக்குயர் செல்வமே'', ''துறை நோக்கம்'', ''பிழை பொறுக்க முறையிடு'' ஆகிய பாடல்களில் குமரகுருபரனை வருணித்தார். சுவாமிகள் ஆகார நியமம் கொண்ட தால், மெய் எனும் ஞானத்தை உணர்ந்தார். அடியார் கள் இகபர சௌபாக்கியம் பெற சண்முகக் கவசம் அருளினார்.

இளைஞன் வடிவில் வந்து காஞ்சிபுரத்தில் உள்ள குமரகோட்டத்தை சுவாமி தரிசனம் செய்ய அருள் புரிந்தான். இராமநாதபுரத்தில் இருந்து மேற்காக 26 கி.மீ. தொலைவில் உள்ள பிரப்பன் வலைசையில் தவம் இருந்ததில் 7-ம் நாள் அகத்திய முனிவருடனும்,



பாடல்களை ஒன்று திரட்டி, 11-ம் திருமுறையாகவும், தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய சேய்த்தொண்டர் புராணத்தை, 12-ம் திரு முறையாகவும் தொகுத்து, ''முருகவேள் பன்னிரு திருமுறை'' எனும் தலைப்போடு உருப்பெற்று புத்தக வடிவில் வெளிவரச் செய்த உத்தமராவார். முருகனடி யார்கள் இது போன்ற தலைப்பினில் தொகுக்கப் பட்டதை ஏற்றுப்போற்றி, தணிகேசனின் அருள் பெறு வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இத்தகைய அரிய பெரிய பணியை, தணிகை மணி வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் தம் இளமை வயதிலேயே செய்யத் தவறியதை, இறைவ னிடம், தமது வாழ்நாள் வீணாளாக கழிந்தது குறித்து வருந்தி முறையிட்டதன் பயனே, தமது முதுமை யில் சிறிதும் மனம் தளராது ஊக்கத்தோடு வரலாறும் போற்றப்படும் விதத்தில், பாடல்கள் அனைத்துக் கும் உரை எழுதியும் இது காறும் யாவராலும் எழுதிப் பூர்த்தி செய்யப்படாத ஒரு பெரிய சாதனையை, தணிகேசனே அருளிச் செய்ய கருணை உள்ளம் கொண்டான்.

இத்தகு அரும்பணியை தணிகேசனின் அரு ளால், தம் முதிய வயதில், என்றும் நிலைத்து இருக்கக் கூடிய அரும் பெரும் சாதனையை செய்து முடித்த, தணிகைமணி, டாக்டர், வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்க ளை, உங்களோடு சேர்ந்து, கண்மலராலும், மனமலராலும், கைம்மலராலும் போற்றிப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். அன்னாரது குடும்பத்தினரும் சகல செல்வ மிக்க பெருவாழ்வையும் பெற்று வாழ, இறை வனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இனி 6 திருமுறைகளாகிய, முருகனுக்குகந்த 6 திருப்பதிகளில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களை ஆராய முற்படுகிறேன்.

சரவணதகப்பன் சாமி எனவரும் பெருமாளே -
கலக்குண்டாகு புவிதனில் எனக்குண்டாகு பணிவிடை
கணக் குண்டாதல் திருவுளம் - அறியாதோ

(தொடரும்)

பாடல்களையும், பொதுப்பாடல்கள் போன்றவை களையும் சேர்த்து 7-ம் திருமுறையாகவும், அடுத்தாற் போல், அருணகிரிநாதரால் அருளிச்செய்யப்பட்ட கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி ஆகிய நூல்களில் அடங்கிய பாடல்கள் 8-ம் திருமுறையாகவும், சிற்றின்ப வர்ணனையோ, நோய்களைப் பற்றியோ, வறுமை யைக் குறித்தோ சிறிதும் கலவாது, பேரின்ப நிலை யில், அத்வைதத்திற்கு நிகராக பாடிய பாடல்களாகிய திருவகுப்பு எனும் தொகுப்பை 9-ம் திருமுறையாக வும், முருகனடியார்களால் மந்திர நூலாக போற்றப் படும் கந்தரனுபூதி - 51 செய்யுட்களை - 10-ம் திருமுறை யாகவும், பொருந்தும் வகையில் எல்லாப் பாடல் களுக்கு உரையோடு முதன் முதலாக எழுதி வெளிவரச் செய்த புண்ணிய சீலர் தணிகை மணி என்றால் மிகை யாகாது.

அடுத்தாற்போல், திருமுருகாற்றுப்படை, கந்தர்கலி வெண்பா, மற்றும் முருகனைப் பற்றிய

★★★

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா - விரிவுரை

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt., PhD.

**9) தன்மயம் சுபாவம்**

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்,
பூத இருள்தனை விழுங்கும்
பூர்ண சந்த்ரோதயம் போலவும், சந்திரன்
பொன்னொளியை உள்விழுங்கும்
மன்னும் ஆயிரகோடி சூரியர்கள் போலவும்,
வல்லிரும் பினை விழுங்கும்
மண்டு கனல் போலவும், உப்பினை விழுங்கிடும்
வாரிநீரைப் போலவும்
என்னைநீ உள்விழுங்கிக் கொண்டிருப்பது இனி
எக்காலம் எக்காலம் என்று
ஏழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவில்லையே,
உன்னருள் இரங்கும் நாள் எந்தநாள் ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

மூலகங்களின் இயல்பு, மாற்றம், விளைவுகள், பயன்பாடு ஆகியவற்றை உரைக்கும் துறையைத் தற்காலத்தில் வேதியல் என்கிறோம். அண்மைக் காலம் வரை அதனை 'இரசாயனம்' என்று குறிப்பிட்டு வந்தனர்.

வேதியல் மாற்றங்கள், விளைவுகள் போன்றவற்றைச் சித்தர்கள் முதலானோர் நன்கு ஆராய்ந்துள்ளனர். பாதரசத்தின் துணை கொண்டு அவர்கள் ஆய்வுகளைச் செய்துள்ளனர். பல கண்டுபிடிப்புக்களையும் தந்துள்ளனர். பாதரசத்தை மூலப்பொருளாகக் கொண்டு விந்தைகளை விளைவித்ததால் அவர்களை 'ரசவாதிகள்' என்றனர். 'ரசவாதம்' இரசாயனமாகித் தற்காலத்தில் வேதியலாக உருப்பெற்றுள்ளது.

'ரசவாதிகள்' உருவாக்கும் கலவைப் பொருளை 'குளிகை' என்று குறிப்பிட்டனர். குளிகைகள் அகத்திலும் புறத்திலும் மாறுதல்களை விளைவிக்கும்.

சில சுயநலக்காரர்கள் பொருளீட்ட இக்கலையைப் பயன்படுத்தினர். இரும்பைப் பொன்னாக்குவதாகக் கூறி மக்களை ஏமாற்றினர். அதனால் சித்தர்களின் அறிவுப்பூர்வமான ஆய்வு ஆக்கப்பணிக்குப் பயன்படாமல் போயிற்று. இரசவாதம் என்பது 'ஏமாற்று வேலை' என்ற பரவலான கருத்து எழுந்துவிட்டது.

கண்ணாடியை வைரம் அறுக்கும் என்று ஆராய்ந்து கண்டவர்கள் இரசவாத சித்தர்களே.

பாதரச குளிகையில் தங்கம் கரைந்து விடும் என்பதும் அவர்களின் கண்டுபிடிப்பு.


இரசகுளிகையுடன் சேர்ந்த தங்கம் தன்னை இழந்து தானும் குளிகையின் ஒரு பகுதியாக உட்கலந்து விடும்.

அளவிற் பெரியதாகவும், எளிதில் வெல்ல முடியாததாகவும், அகற்ற முடியாததாகவும் உள்ளவற்றைப் 'பூதாகாரம்' என்போம். இருள், உலகைப் பூதாகாரமாய்க் கவ்விக்கொள்கிறது. முழுநிலவு உதயமானால் பூதஇருள் அகன்று விடுகிறது. அதாவது, நிலவுதயம் பூத இருளையும் விழுங்கிவிடுகிறது.

பூரணச்சந்திரன் - முழுநிலவு உள்ள பௌர்ணமி நாளில் நள்ளிரவிலும் இருள் தலைகாட்டுவதில்லை. ஆகவேதான் திருவிழாக்கள் பெரும்பாலும் முழு நிலவு நாட்களில் நடைபெறுகின்றன. மக்கள் இயற்கையொளியில் இறைவன் உலாவைக் கண்டு மகிழ்கின்றனர்.

பூரண நிலவும் சூரியோதயம் ஆனவுடன் பொலிவிழந்து போய்விடுகிறது. ஆயிரங்கோடி சூரியர்கள் ஒன்றாய் உதித்தால் என்னாகும்? நிலவொளி சூரியப் பிரகாசத்தில் ஒன்றாகிக் கலந்துவிடும்.

பெரிய நெருப்பில் - மண்டு கனலில் வன்மை பெற்ற இரும்பும் காய்ந்து உருகிக் கனலோடு கனலாகி விடும்.



'உவரி' என்றே பெயர்பெற்ற கடல்நீரில் உப்பைப் போட்டால் அதுவும் ஒன்றாகக் கரைந்து கலந்துவிடும்.

இறைவன் இரசகுளிகை போல் இருக்கிறான்.
அவன் முழுநிலவாய் இருக்கிறான்.
அவன் ஆயிரங்கோடி ஆதவர்களாய் இருக்கிறான்.
அவன் மண்டுகனலாய் இருக்கிறான்
அவன் கடல் (வோரி) நீராக இருக்கிறான்.

ஒன்றாய், அனைத்தையும் கடந்த நிலையில் நின்ற இறைவன் ''நான் பலவாக ஆவேன்'' எனத் திருவுள்ளங்கொண்டான். உடனே உலகனைத்துமாய் விரிந்தான். ஆகவே, அவனே அனைத்தும். அவனன்றி வேறில்லை.

ஆகவே, அவற்றை தெய்வமயமாக்குதல் எளிது. எனினும் உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப அவற்றை அருட்செய்து ஆண்டு கொள்கிறான்.

அவ்வருள் காதலாகிக் கசிந்து உருக வேண்டும். அழுது காமுற்று அரற்ற வேண்டும். அழுதால் அவனைப் பெறலாகும். அவன் அருள் எளிதாக்கும்.

"என்னேநீ உள்விழுங்கிக் கொண்டிருப்பது
எக்காலம் எக்காலம் என்று
ஏழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவில்லையே!
உன்னருள் இரங்கும் நாள் எந்தநாள்''

இதுதான் சுவாமிகளின் முறையீடு

''நெறிபார்க்கில் நின்னையன்றி அகிலம் வேறா?
நிலம்நீர் தீச்சால் வாகனும் நீயலாத
குறியேதும் இல்லை யென்றால் யாங்கள் வேறோ?
கோதை ஒரு கூறுடையாய்! கூறாய் கூறாய்.''

அவனல்லாத அகிலமின்மையைத் தாயுமானவர் இவ்வாறு உரைக்கிறார்.

பொய்க்கண்டார் காணாத புனித மெனும் அத்துவித
மெய்க்கண்ட நாதன் அருள் மேவும் நாள் எந்நாளோ?

என அவன் தன்வயமாக்கிக் கொள்ளும் திறனையும் உரைத்து அது எந்தநாள் நிகழும் எனவும் தாயுமானவர் வினவுகிறார்.

மேலும் தென்முகக் கடவுளின் இயல்பே - சுபாவமே 'தன்வயம்' எனவும் உரைக்கிறார்.

தன்மயம் சுபாவம், சுத்தம், தண்ணருள் வடிவம்
சாந்தம்
மின்மயமான அகண்ட வெளியுருவான பூர்த்தி
என்மயம் எனக்குக்காட்டாது எனை அபகரிக்க வந்த
சின்மயம் அகண்டாகாரம் தெட்சிணாமூர்த்தம்.

இரசகுளிகை பொன்னையும், முழுநிலவு இருளையும், ஆயிரஞ் சூரிய ஒளி நிலவொளியையும், மண்டு கனல் இரும்பையும், கடல் உப்பையும் தன் வயம் ஆக்கிக் கொள்வது போலத் தென்முகப் பரமன் தம்மை உள்விழுங்கித் தன்மயம் ஆக்கிடல் எந்நாளோ என்ற தம் ஏக்கத்தை இப்பாடலில் சுவாமிகள் வெளிப்படுத்துகிறார்.

★ ★ ★

# திருக்கள்ளில் திருப்பதிகம்

- சித்தாந்தரத்தினம் த. ஆறுமுகம்

கள் - களிப்பு - இன்பம். இறைநிலையில் பேரின்பம். இல்-வீடு. இறைநிலையில் கோவில். திருக்கள்ளில் பேரின்பத்தைப் பெற்றுத்தரும் இல்லம். பேரின்ப நிலையம். திருக்கள்ளிலில் திருஞான சம்பந்தர் வழிபட்டுப் பதிகம் பாடினர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

1) முள்ளின்மேல் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வு எய்தல் ஒருதலையே.

*(விளக்கம்)* முட்கள் நிறைந்த மரங்களின்மேல், வயதாலும் தேர்ச்சியாலும் முதிர்ந்த ஆந்தைகள் அலறும் சோலைகளால் சூழப்பட்டதும், விளாமரங்களில் ஆடை சுற்றியது போல பயனுள்ள கொடிகள் படர்ந் திருப்பதுமான திருக்கள்ளில் என்ற தலத்தில் விரும்பி உறைபவர் சிவபெருமான். பெருமை மிக்க தலைவ ராயிருக்கும் அவர் கழலணிந்த திருவடிகளில் நாள் தோறும் நம் உள்ளத்தைப் பதித்தால் வாழ்வில் உயர்வது திண்ணம்.

2) ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடுஅலால் கலன் இல்லான் உறைபதியால்
காடுஅலால் கருதாத கள்ளில் மேயான்
பாடுஎலாம் பெரியோர்கள் பரசுவாரே.

*(வி-ம்)* சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் களை விளையாட்டாக, எளிதாக, கூத்து வாயிலாக இயற்ற வல்லவர். மறைமொழிகளைப் பாட்டாக இசைக்கவும் வல்லவர். பிறர் அச்சம் கொள்ளத்தக்க பாம்புகளை அணிகலன்களாகப் பூண்டவர். பிச்சை ஏற்பதற்குப் பிரமனின் தலை ஓட்டைத் தவிர எதை யும் கொள்ளாதவர். தாம் உறைவதற்கு ஏற்ற இடமாக, சுடு காட்டைத்தவிர அரண்மனை, மாளிகைகளைக் கருதாதவர். திருக்கள்ளிலில் விரும்பி இருப்பவர். அவர் பெருமைகளையெல்லாம் பெரியோர்கள் போற்றிப் புகழ்வர். நாமும் போற்றிப் புகழ்வோம்.

3) எண்ணார் மும்மதில்எய்த இமையா முக்கண்
பண்ணார் நான்மறைபாடும் பரமயோகி
கண்ணார் நீறு அணிமார்பன் கள்ளில் மேயான்
பெண் ஆண் ஆம் பெருமான் எம்பிஞ்ஞகனே.

*(வி-ம்)* தமக்கு மேல் ஒரு தலைவன் இருக் கிறான் என்பதை மதிக்காத முப்புரத்தாரின், மூன்று மதில்களோடு கூடிய கோட்டைகளை அம்பால் எய்து அழித்தவர், ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று இமைக்காத கண்களை உடையவர், பண்நிறைந்த அறம், பொருள், இன்பம், வீடு குறித்த நான்மறை களைப் பாடிக்கொண்டிருப்பவர் சிவபெருமான். யோகியருக்கெல்லாம் தலைமை யோகியாக இருப்ப வர். பல நலங்களைத் தருவதும் காண இனியது மான திருநீற்றை மார்பில் அணிந்தவர். திருக்கள்ளில் தலத்தில் நிலைத்திருப்பவர். தலைக்கோலம் கொண்ட வரே.

4) பிறைபெற்ற சடைஅண்ணல் பெடைவண்டு ஆலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார்நயந்த
கறைபெற்ற மிடற்றுஅண்ணல் கள்ளில் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுளானே.

*(வி-ம்)* பிறை நிலாவைச் சடையில் அடைக் கலமாக ஏற்றுக்கொண்ட பெருமையும் தலைமையும் உடையவர். பெண்ணும் ஆணுமாக வண்டுகள் களித்து இசைபாடும், தேன் நிறைந்த கொன்றை மாலையை விரும்பி அணிந்தவர், தேவர்களைக் காக்கும் பொருட் டுக் கருணையால் நஞ்சை உட்கொண்டு கழுத்தில் கரிய கறையைப் பெற்றவர், பெருந்தகையாளர், - திருக் கள்ளிலில் குடிகொண்டிருக்கும் சிவபெருமான். அவர் நிறைபெற்ற அடியார் (காப்பன காத்து கடிவன கடிந்த வர் - வீடுபேற்றுக்குத் தகுதியான முழுமை பெற்ற வர்)களின் இதயத்தில் குடியிருப்பார்.

5) விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரார் அம்மாக்
கரையார் பொன்புனல் வேலிக்கள்ளில் மேயான்
அரையார் வெண் கோவணத்த அண்ணல் தானே.

*(வி-ம்)* இருபுறமும் கரைகள் அமைந்து, பொன் கொழித்து வெள்ளமாக வரும் (குசத்தல) ஆறாகிய வேலியால் சூழப்பட்டது, திருக்கள்ளில் தலம். அங்கு வீற்றிருக்கும் சிவபெருமான், தம் இடுப்பில் வெண்ணிற ஆடையைக் கீழப்பாய்ச்சியாக அணிந்திருப்பார். அவர் திருவீதிவலமாக வரும்போது ஊர்மக்கள் பல வகையான மணப்பொருள்களையும் மலர்களையும்

தூவியும் குன்றாத புகழுரையாலும் எதிர்கொண்டு வழிபடுவர். நாமும் அப்படி வழிபடுவோம்.

குறிப்பு : ஆற்றில் வெள்ளம் வரும்போது மணப் பொருள் மலர்கள் தூவிப் போற்றிப் புகழ்ந்து அந்த ஆற்றை ஊர்மக்கள் எதிர் கொள்வர் என்றும் கொள்ளலாம்.

6) நலனாய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய் தலை ஒட்டான் கள்ளில் மேயான்
மலனாய தீர்த்து எய்தும் மாதவத் தோர்க்கே.

***(வி-ம்)*** அடியார்களுக்கு நலம் செய்யும் நோக்கத்தோடு பிச்சை ஏற்கிறவர், அதாவது அடியார் களுடைய குற்றம் குறைகளையே பிச்சையாக வாங்கி விடுகிறவர், நம்பிக்கைக்கு உரியவராய் நம்மவராய் இருக்கிறவர். பெருவெற்றிகளைக் குவிக்கவல்ல மழு, வாள், வேல் முதலியவற்றை கையாளுவதில் வல்லமை பெற்றவர். பிச்சைப்பாண்டமாகப் பிரமன் தலை ஓட்டையே வைத்திருப்பவர். திருக்கள்ளிலில் விரும்பி இருப்பர். பெருந்தவம் செய்தவர்களுடைய மும்மலங் களை அடக்கி அவர்களுக்கு அணுக்கமாக இருப்பவர் சிவபெருமானே.

7) பொடியார்மெய் பூசினும் புறவின் நறவம்
குடியாஊர் திரியினும் கூப்பிடினும்
கடியார்பூம் பொழில்சோலைக் கள்ளின்மேயான்
அடியார் பண்பு இகழ்வார்கள் ஆதர்களே.

***(வி-ம்)*** திருநீற்றுப் பொடியை உடலில் முழுதும் அல்லது பல இடங்களில் முறைப்படி பூசிக் கொண்டாலும், அல்லது இறைவன் நினைப்பில் அழுந்தி நிற்பதால், பூசுவதை மறந்து, காட்டுத்தேனைக் குடித்து மகிழ்ந்திருப்பது, ஊர் ஊராகச் சுற்றித்திரிவது, மனம் போன போக்கில் யாரையாவது எதையாது கூப்பிட்டுப் பேசுவது இப்படி எதைச் செய்தாலும், அவர்கள் மணம் மிகுந்த பூக்கள் மலர்ந்த சோலைகளுக்கு நடுவில் அமைந்திருக்கும் திருக்கள்ளிலை வாழ்விட மாகக் கொண்ட சிவபெருமானுக்கு மெய்யடியார் களானால், அவர்கள் குற்றங்குறைகளைக் கண்டு இகழுபவர்கள் வீணர்கள், அறிவில்லாதவராவர்.

மெய்யடியார் செயல் எல்லாம் சிவன் செயலே என்பது.

8) திருநீல மலர்ஒண்கண் தேவிபாகம்
புரிநூலும் திருநீறும் புல்குமார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளில் என்னும்
பெருநீல மிடற்று அண்ணல் பேணுவதே.

***(வி-ம்)*** அழகிய நீலமலர் போலவும், ஒளி யுள்ளனவுமாகிய கண்களையுடைய உமையம்மைக்குத் தன்வடிவில் ஒரு பாதியை வழங்கியிருப்பவரும், முப்புரிப்பூணூல், திருநீறு சேர்ந்து தோன்றும் மார்பின ரும், முழுநீல, நிறமுள்ள கழுத்தை உடைய பேரரு ளாளருமான சிவபெருமான் என்றும் விரும்பிப் போற்றிவருவது, கருநீலமலர்கள் மிகுந்து தேன் சொரியும் திருக்கள்ளில் திருத்தலமேயாகும். எனவே நாமும் அத்தலத்தைப் போற்றி வழிபடுவோம்.

9) வரியாய மலரானும் வையம் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளுதற்கு அங்கு
அரியானும் அரிதாய கள்ளில் மேயான்
பேரியான் என்று அறிவார்கள் பேசுவாரே.

***(வி-ம்)*** செவ்வரிகளைக் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், உலகம் முழுதும் தனக்கே உரிமையாகும்படித் தன் காலால் அளந்து கொண்டு விட்ட திருமாலும், உள்ளத்தாலும் உணர்தற்கு அரியவர் சிவபெருமான். அவர் ஒப்பில் லாத திருத்தலமான திருக்கள்ளிலில் மகிழ்ந்து இருப்ப வர். அந்த இறைவரை அனைவரினும் பெரியவர் (பிறவாயாக்கைப் பெரியோன்) என்று புகழ்ந்து பேசுவர் தெளிந்த சான்றோர்.

10) ஆச்சியப் பேய்களோடு ஆமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணுமின்கள்
மாச்செய்த வளவயல் மல்குகள்ளில்
தீச்செய்த சடை அண்ணல் திருந்து அடியே.

***(வி-ம்)*** கேலிக்குரியவரும், பேய்கள் போன்ற வருமான சமணர், முரட்டுப்பௌத்தர் சொல்லும் அறிவுரைகள் நன்னெறி காட்டமாட்டா. அவற்றைக் காது கொடுத்துக் கேட்பதைத் தவிருங்கள். செல்வம் கொழிக்கும் வளமான வயல்கள் நிறைந்த திருக் கள்ளிலில் வீற்றிருப்பவர் சிவபெருமான். தீப்போல சிவந்த சடை (செஞ்சடை) உடையவர். பெருமை பெற்றவரான அவர்தம் திருவடிகளே நன்னெறி காட்ட வல்லன. அவற்றைத் தொழுவோம் (ஆச்சியம் - ஹாஸ்யம். நகைப்புக்குரியது)

11) திகை நான்கும் புகழ்காழிச் செல்வம் மல்க
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவு முதிர்சடையான் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே.

***(வி-ம்)*** நான்கு திசைகளில் உள்ளவரும் புகழும் படி ஓங்கி நிற்பது சீகாழித்தலம். அருட்செல்வம் மிக்கவர். பகல்போலத் தெளிவான பேரொளியோடு (ஞானத்தோடு) விளங்குபவர் திருஞானசம்பந்தர். மலரும் பருவத்து மொட்டுகளை அணிந்த முதிர்ந்த செஞ்சடையுடையவர் திருக்கள்ளிலில் உள்ள சிவ பெருமான். அவரைத் திருஞானசம்பந்தர் பதிகப் பாடல்களால் போற்றி வழிபட்டால் பெரும்புகழும் பேரின்பமும் வந்தடைவது உறுதி.

★★★

# பாம்புக்குப் பரிவு காட்டிய பக்தர்

–புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ., பி.எட்.

இராமானுசரின் சிறிய தாயாரின் மகனே கோவிந்தராவார். இவர்தான் இராமானுசரை, குரு யாதவப் பிரகாசரின் கொலைத் திட்டத்திலிருந்து காத்தவர். இவர் கங்கையில் நீராடும் போது, இலிங்கம் பெற்று அது முதல் சைவராகி திருக்காளத்தியில் சிவத் தொண்டு செய்து வந்தார். இதையறிந்து மனம் வருந்திய இராமானுசர், திருமலை நம்பிகளின் உதவியால் மனம் திருத்தி, மீண்டும் வைணவராக்கினார். கோவிந்தர் திருமலை நம்பிகளுக்கு தொண்டு செய்து திருமலையில் வசித்து வந்தார்.

இந்த நேரத்தில் இராமானுசர் திருமலை நம்பிகளிடம் இராமாயணம் கேட்க திருமலைக்குச் சென்றார். ஓராண்டு காலம் திருமலையில் தங்கி இராமாயணம் கேட்டார். அப்போது ஒரு நாள் கோவிந்தர் நந்தவனத்தில் பூச்செடிகளுக்கும், துளபச்செடிகளுக்கும் களையெடுத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு நாகப் பாம்பு தன் தலையைக் கீழும் மேலுமாக புரட்டி துள்ளிக்கொண்டிருந்தது. அதன் நாக்கில் ஒரு பெரிய முள்தைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். இதைக் கண்டு மனம் வருந்தினார். பாம்பின் துயர் கண்டு இரக்கம் கொண்டார். விஷப் பாம்பென்றும் பாராமல் அதன் அருகில் சென்று, அதைப் பிடித்து நாக்கில் முள் தைத்திருப்பதைக் கண்டார். இந்நேரத்தில் இராமானுசர் தோட்டத்திற்கு வந்தார். கோவிந்தர் பாம்பும் கையுமாக இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். உடனே அருகில் சென்று, ''கோவிந்தா! என்ன இது பாம்பின் வாயில் கையை வைத்துக் கொண்டு என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார். கோவிந்தர் இராமானுசரை நோக்கி, ''இப் பாம்பின் நாக்கில் முள் தைத்திருக்கிறது. அதை எடுத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

இதைக் கேட்ட இராமானுசர் பெரும் வியப்பு அடைந்தார். விஷப்பாம்பு என்று அறிந்திருந்தும் அதைப் பிடித்து, அதன் நாக்கிலுள்ள முள்ளை எடுத்த கோவிந்தரின் கருணையைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். தனது இளவல் கோவிந்தன் இத்தகைய இரக்கம் கொண்டு, ஊர்வனவாகிய பாம்பின் துயர் தீர்த்ததை எண்ணி, எண்ணி மகிழ்ந்தார்.

## பாம்பும், கோவிந்தனும்

இராமானுசர் கோவிந்தரை நோக்கி, ''பிற உயிர்களின் துயரத்தைக் கண்டு மனம் பொறுக்காமல், அத்துயரத்தைத் தன் துயரமாகக் கொண்டு, அவற்றைப் போக்குகின்றானோ! அவனே உண்மையான மனிதனாவான். அவனே திருமாலடியாரும் ஆவார். அத்தகைய சிறந்த செயலைச் செய்த நீரே உத்தம மனிதர், சிறந்த திருமாலடியவர், உம்மைத் தம்பியாகப் பெற்றது நான் செய்த நற்பேறு'' என்று கூறி மகிழ்ந்தார். இத்தகைய இளவலை தம்முடன் திருவரங்கம் அழைத்துச் சென்று தனது வைணவத் தொண்டுக்குப் பயன் படுத்திக்கொள்ள நினைத்தார். இங்கு

''அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்<br>தன்நோய்போல் போற்றாக் கடை'' (குறள்)

என்ற குறட்கருத்து நோக்கத்தக்கது.

இராமானுசர் திருமலையைவிட்டு திருவரங்கம் திரும்பும் போது கோவிந்தரைப் பரிசாகப் பெற்று வந்து, திருமால் நெறி பரப்ப பயன்படுத்திக் கொண்டார். கோவிந்தரும் ஞான, பக்தி, வைராக்கியங்களில் சிறந்து விளங்கினார். இராமானுசரிடம் மிகுந்த பக்தியுடையவராய் விளங்கினார். எப்போதும் இராமானுசருக்குப் பணிவிடை செய்வதும், உபதேசங்கள் கேட்பதும் இராமானுசருடைய முழு கவனத்தையும் ஈர்த்தது.

இதனையே

''இராமானுசன் மிக்க சீலமல்லாமல்<br>உள்ளாது என் நெஞ்சு''

என்றனர் வைணவச் சான்றோர்.

இராமானுசர் கோவிந்தருக்கு ''எம்பார்'' என்று சிறப்புப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

இத்தகைய ஒழுக்கச் சீலர் ஸ்ரீபெரும்புதூரை அடுத்த மழலை மங்கலமென்னும் ஊரில் அவதரித்தார். நாம் அத்திருப்பதிக்குச் சென்று எம்பாரைச் சேவிப்போம். நாமும் அவரைப் போல எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி, உதவி புரிந்து உத்தமராக விளங்குவோம். மற்றும் அவரைப் போல ஆச்சாரிய பக்தி மிகுந்து, திருமால் நெறி போற்றி, வளர்த்து, தொண்டு புரிந்து வாழ்வோமாக!

"தொண்டே செய்து என்றும் தொழுது வழியொழுகப்<br>பண்டே பரமன் பணித்த பணிவகையே''<br>(திருவாய்மொழி)

''மகரத்தில் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே!<br>பட்டர் தொழும் ''எம்பார்'' பொற்பத மிரண்டும்<br>வாழியே!

நித்ய ஸ்ரீ - நித்ய மங்களம்.

# தாயே சரணம்

**கவிஞர் . ச.க. ஏகாம்பரம்,** எம்.ஏ., பி.எட்.

தாயும் ஆன சுவாமிகளும் - (ஈசன்)
தாயுமான சுவாமிகளும் - (நேசன்)

எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏதுவருமோ அறிகிலேன் - சித்தர் கணம் பாடல் - 4

தஞ்சை மாவட்டத்தில் கடலோரத்தில் அமைந்துள்ளது வேதாரண்யம் என்ற ஊர். அவ்வூர் வரலாற்று சிறப்பெல்லாம் பெற்று விளங்கியது. வேதாரண்யம் என்பது காரணப்பெயராலே அமைந்தது எனலாம். அதாவது வேதங்களை வளர்த்தவனம் என்னும் பொருளுடையதாலேயே பிற்காலத்தில் வேதாரண்யம் என்று வழங்கலாயிற்று. இதே ஊரை திருமறைக்காடு என்றும் தனித் தமிழ் பெயரால் அழைப்பர்.

இவ்வூர் சிறந்ததொரு சிவத்தலம் அமைந்ததாகும். சுமார் 300 ஆண்டிற்கு முன் வாழ்ந்த சைவ வேளாளர் சூலத்தில் பிறந்து சிறந்தவர் பலருண்டு என்றாலும் குறிப்பிடத்தக்கவர் இருவர். அவர்கள் வேதாரண்ய பிள்ளையவர்களும், அவரது இளவல் கேடிலியப்ப பிள்ளையவர்களுமாவர்.

கேடிலியப்ப பிள்ளை, தம் பெயருக்கேற்பவே குற்றம் குறை இல்லாத நல்வாழ்வு நடத்தி வந்தார். அவர் கல்வியிலும், கேள்வியிலும் சிறந்துவிளங்கினார். இவரது நேர்மையையும் ஆட்சித் திறத்தையும் கண்ட ஊர்மக்கள் அவ்வூரின் சிவாலய ஆட்சிப் பொறுப்பை இவரிடம் தந்தனர். இறையனாருக்கும், இறையன்பர்களுக்கும் தொண்டாற்றும் இனிய வாய்ப்பு என்பதால் இன்முகத்தோடு பொறுப்பை ஏற்றார்.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் ஆட்சி புரிந்துவந்த விசயரங்க சொக்கநாத நாயக்கர் கடலாடும் பொருட்டும், திருமறைக் காட்டில் கோயில் கொண்ட சிவனை வழிபடும் பொருட்டும் அவ்வூருக்கு வந்தார். அரசரது வருகை அறிந்த கேடிலியப்பப்பிள்ளை, அவர் ஏற்றிருந்த ஆலய ஆட்சிப் பொறுப்பு நெறியில் நின்று அரசரை ஆலய மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டையும் அவருக்கு முறையாக நிறைவேற்றினார்.

அவரது உபசாரம் அரசரைப் பெரிதும் ஈர்த்தது. ஆகவே அவர்தமது அரசின் தலைமைப் பணியை ஏற்குமாறு வேண்டவே இசைந்தார். தகுதி வாய்ந்த ஒருவரிடம் ஆலய பொறுப்பை அளித்து விட்டுத்திருச்சிராப்பள்ளி சென்று தலைமைப் பணியில் ஈடுபட்டார். கேடிலியப்பிள்ளைக்கும் துணைவியார் செகவல்லியம்மைக்கும் மூத்த மகனாக சிவ சிதம்பரம் விளங்கினார்.

கேடிலியப்பிள்ளையின் தமையனாராகிய வேதாரண்யபிள்ளைக்கு மகப்பேறு கிட்டவில்லை. ஆகவே குடும்ப வாரிசாக சிதம்பரம்பிள்ளையே வாய்த்தான். தன்னைப் பெற்றோரினும் பெரியப்பாவும், பெரியம்மாவும் பன்மடங்கு பாசம் காட்டினர். அதே போல் இவரும் மிகுந்த அன்புகாட்டினார். இந்த அன்பான உறவுச் சூழலுக்கு எந்த இடையூறும் ஏற்படா வண்ணம், தம் செல்வனை தம் தமையனாருக்கு மனமுவந்து சுவீகாரம் செய்து பின்னர் கேடிலியப் பிள்ளை திருச்சிராப்பள்ளி சென்றார்.

சிவனிடத்தில் மீளாத காதல் கொண்ட பிள்ளையும் அவர்தம் துணைவியாரும் திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியிருக்கும் சிவனாராகிய தாயுமானவர் ஆலயம் சென்று நாள்தோறும் வழிபட்டு வந்தனர். 'தாயுமானவர்' என்பதற்கு உலகனைத்திற்கும் சிவனார் தந்தையாய் இருப்பவர் மட்டுமல்ல, தாயும் ஆனவர் என்பதே பொருளாகும். சிவனார் இப்பெயர் பெற்றதற்கு ஒரு காரணமும் உண்டு.

செட்டி நாட்டு பெண் ஒருத்தி கருதரித்திருந்தாள். குழந்தை பிறப்பதற்கு முன்பே பக்கத்து ஊரில் இருந்த தன் தாய் வந்து பேறு காலத்தில் தக்க துணையாக இருக்கவேண்டுமென சிவனிடம் வேண்டியிருந்தாள். பேறுகாலம் வந்ததும் தன் தாயை உதவிக்கு வருமாறு வேண்டினாள். தாயின் வருகையை எதிர் நோக்கி இருந்தாள். திடீரென காவிரி பெருக்கெடுத்து பாயவே ஆற்றைக் கடந்து வர தாயால் முடியாது போனது. அப்பெண்ணின் குறையைத் தீர்க்கவே ஈசனே அவளது தாயின் வடிவத்தில் வந்து அப்பெண்ணுக்கு பணிவிடை செய்து அருளினார். அதன் காரணமாகவே ஈசனுக்கு தாயும் ஆனவர் என்ற திருப்பெயர் ஏற்பட்டது என்பர். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் எழுந்தருளியிருக்கும் தாயும் ஆன சுவாமிகளை கேடிலியப்ப பிள்ளையும் அவரது துணைவியாரும் நாள்தோறும் காலை, மாலை இரு வேளையும் வழிபட்டு தங்களுக்கு மகப்பேறு வாய்க்க வேண்டினர். அவ்வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு

ஆண் மகன் பிறக்க அருள் செய்தார். தாயுமான சுவாமி களின் திருவருளால் வாய்த்த மகன் என்பதால் குழந்தைக் கும் தாயுமானவர் என்றே பெயர்சூட்டி மகிழ்ந்தனர்.

கருவிலேயே திருவுடைய தாயுமானவரிடம் அங்க அடையாளங்களில் உயர் நிலைகள் பல தென் பட்டன. பிற்காலத்தில் அவர் பரநாட்டத்தில் மேன்மை எய்துவார் என்று சோதிடர் கணித்தனர். தாயுமானவ ருக்கு ஐந்து அகவை நிறைந்ததும் முறையாக கல்வி கற்பித்தனர். திருச்சிராப்பள்ளி சிற்றம்பல தேசிகர் அவருக்கு முதல் ஆசானாக விளங்கி கல்வி கேள்வி ஞானத்தை அளித்தார். கலை ஞானமும் விரைவாக அவரிடத்தில் அமைந்தது. தமிழ், வடமொழி, கணிதம், சோதிடம் எல்லாவற்றிலும் தேர்ச்சி அடைந்தார்.

நாளடைவில் தேவாரம், திருவாசகம், சைவ ஆகமங்கள், திருப்புகழ் போன்ற நூல்களையும் பிழை யற கற்றுத் தெளிந்தார். இளம்வயதிலேயே தெய்வ பக்தி மிகவே அமைந்திருந்தது. நாள்தோறும் திருச்சி மலைக்கோட்டைக்குச் சென்று சிவனாரையும், திரு வானைக்காவுக்குச் சென்று அகிலாண்ட நாயகியையும் வழிபடுவது அவரது வழக்கமானது, ஒருநாள் வழி பாடு முடிந்ததும் கீழே வரும்போது இடையில் சான்றோர் ஒருவர் நிற்பதைக் கண்டு நின்றார். ''காந்தம் ஊசியை இழுப்பதுபோல'' அந்த இளைஞ னுடைய உள்ளத்தை ஈர்த்தார். அவரும் அவர் பாதங் களில் விழுந்து வணங்கினார்.

அவரை அந்த இளம் பருவத்திலேயே ஆட் கொள்ளவந்த பரமாசாரியர் அச்சான்றோர் ஆவார். அவர் குறைந்த அளவே பேசுவதால் மௌன குரு எனக் கருதி அவருக்கு ஆட்பட்டார். அம்முனிவர் 'திரு மூலர்' மரபில் வந்தவர். இக்கருத்தை பிற்காலத்தில் தாயுமானவர் பாடியருளிய மௌன குரு வணக்கம் என்னும் பாடலில் ''மூலன் மரபில்வரு மௌன குருவே'' என்று போற்றுவார்.

இவ்வாறு ஆட்கொள்ளப்பட்ட தாயுமானவர் ஆன்ம சாதனங்களில் விரைந்து முன்னேற்றம் அடைந் தான். ஆழ்ந்த தியானம் புரிதல், தன் ஆசிரியரான மௌன குருவின் முன்னே அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந்து தனக்கு ஏற்படும் ஐயங்களை அகற்றிக்கொள்ளுதல், ஆட்கொண்டவருக்கு பக்திபூர்வமாக பணிவிடைகள் புரிதல் ஆகியன முறையாக நிகழ்ந்து வந்தன. அவ னிடம் தலை மாணாக்கனுக்குரிய அத்தனை நற்பண்பு களும் அமைந்திருந்தன.


இதற்கிடையில் குருவும் சீடனும் பிரியக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்பிரிவினை ஆற்றவொணாத சீடன் மனம் குழம்பியது. பிரிவு காலத்தில் சீடன் தனது பிராப்த கருமங்களின் பெரும் பகுதியை நிறைவு செய்வான் எனவும், அதன்பின் அமையும் குரு சீடன் இணக்கத்தின் தெய்வீகச் சிறப்பு மிகும் எனவும் குருமூர்த்தி உறுதியளித்து, குழம்பியிருந்த அவரைச் 'சும்மாயிரு' என்று கூறி புறப்பட்டுப் போனார். இந்த 'சும்மா இரு' என்னும் உபதேச மொழியே தாயுமான வர் பிற்காலத்தில் எழுதிய பாடல்கள் அனைத்திற்கும் மூல மந்திரமாக அமைந்தது.

உரிய வயது அடைந்ததும் தாயுமானவருக்கு மணம்முடிக்க அவருடைய பெற்றோர் விரும்பினர். ஆனால் அவர் மனமெல்லாம் உலகப்பற்று அற்ற தாகவே இருந்தது. என்றாலும் பெற்றோரின் அன்பு கட்டளைக்கு அவர் ஆட்பட்டார். இதற்கிடையில் இறைவனிடம் உலகபக்தி பாசத்தில் தான் அகப்பட லாகாது என்று வேண்டினார்.

அவருக்கு மட்டுவார்க் குழலி என்ற மங்கையை மணம்முடித்தனர். இருவரும் ''மலரும் மணமும்'' போலவே இணைந்து இனிதே இல்வாழ்வை நடத்தினர். மகப்பேறும் வாய்த்தது. தம் மகனுக்கு கனக சபாபதி என்று பெயரிட்டனர். குழந்தை பிறந்த சில நாட்களில் தன் தாயை இழந்தான். தாயுமானவ ருடைய தமையனார் சிவ சிதம்பரமும் அவருடைய துணைவியாரும் இச்சிறுவனைப் பேணும் பொறுப்பை ஏற்றனர். இவ்வாறு ஆன்ம சாதகனாகிய தாயுமானவ ருக்குப் பராப்த கர்மமாயிருந்த இல்வாழ்க்கை விரை விலேயே முற்றுபெற்றது.

இதற்கு சற்று முன்பே தாயுமானவரின் தந்தை யும் காலமானார். அந்த இழப்பு திருச்சிராப்பள்ளி அரசுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. இதை ஈடுசெய்ய வேண்டுமானால் தகுதி நிறைந்த தாயுமானவரே தன் தந்தை வகித்து வந்த பொறுப்பை வகிக்க வேண்டும் என்று அரசர் விரும்பினார். தனக்கு விருப்பம் இல்லை எனினும் அரசரின் அன்புக்கு அடிபணியும் முகத்தான் அரசுப் பொறுப்பை ஏற்றார். தந்தை பார்த்த பணி யென்பதால் முன் அனுபவத்தின் காரணமாக பணியில் நற்பெயரும் நற்புகழும் அவரைத்தேடி வந்தன. இந்த சமயத்தில் அரசரும் காலமானார். அரசருக்கு மகப் பேறு இல்லாத நிலையில் அவர் ஆணைப்படி அவர் காலமானதும் அரசி மீனாட்சியம்மை நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

தாயுமானவர் கையகத்தே ஆட்சி மிக முறை யாகவும் செம்மையாகவும் நடைபெற்றது. ஆனால் அதில் அவரது மனம் பற்றுகொள்ளவில்லை. இவை யெல்லாம் அவருக்குத் துணைக் கடமைகளாகவே இருந்தன. அவரது மனம் பெரிதும் பரமனிடமே ஈடுபட்டிருந்தது. அவ்வாறு ஈடுபட்டிருந்ததைக் கடலின் கீழ்ப்பகுதியுடன் ஒப்பிடலாம். அவர் அரசாட்சி நடத்தி வந்த நிலையை கடலின் மேற் பரப்புடன் ஒப்பிடலாம். ஒவ்வாறான பரநாட்ட முடையவராகத் தாயுமானவர் விளங்கி வந்தது உலகத் தோர்க்குத் தெரியாது. அக்காலத்தில் அரசாங்கம்



தொடர்பான பல அரிய குறிப்புகள் ஓலைச்சுவடிகளில் பதித்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் தாயுமான வர் அந்த ஓலைச்சுவடியொன்றை வைத்து அலசி ஆராய்ந்து கொண்டிருக்கையில், திடீரென அந்த ஓலைச் சுவடியைத் தனது இரண்டு கைகளாலும் கசக்கி துகள்களாக பாழ்படுத்திவிட்டார். உடனிருந்தவருக்கு வியப்பையளித்தது. சிறிது நேரம் கழித்து தாயுமான வருக்கு தான் செய்த பிழை தெரியவந்தது. உடனே அருகில் இருந்தவர்களிடம் திருவானைக்கா அம்பிகை அகிலாண்டேஸ்வரியின் துகிலில் வீழ்ந்து பற்றிய கற்பூரத் தீயைக் கசக்கி அணைக்க முயன்றேன்; என்னை யறியாது என்கையில் இருந்த இந்த அரிய அரசாங்கப் பத்திரம் பாழ்படுத்தப்பட்டது. அதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன் என்றார்.

சிறிது நேரத்தில் திருவானைக்கா கோவிலிலிருந்து அங்கு நிகழ்ந்த சிறிய விபத்து குறித்து அரண்மனைக்கு செய்தி வந்தது. அர்ச்சகர் கற்பூர தீபாராதனை காட்டியபோது அந்த நெருப்புத் தவறி அம்பிகையின் ஆடையின்மீது விழுந்து தீப்பற்றிக் கொண்டது என்ற செய்தியை சொன்னதும் இந்த தகவல் தாயுமானவருக்கு முன்கூட்டியே அறியும் திறன் படைத்தவர் என்ற திறத்தை அறிந்து பெரிதும் பாராட்டினர். அதன்பின் அரச நாட்டத்தில் என் மனம் இனி செல்லாது என்று விடைபெற்று மீண்டும் மௌன குருவிடம் சரணடைந்தார். ''யமுனையும் கங்கையும் கலந்ததுபோல'' இருவரும் இரண்டறக் கலந்தனர்.

துறவுக் கோலம் பூண்டு வாழ்ந்த தாயுமானவரைக் கண்டவர்கள் இவரை பைத்தியம் என்றும் இகழ்ந்தனர். பலர் போற்றினர். இகழ்வதையும் புகழ்வதையும் இவர் பொருட்படுத்தவில்லை. கிடைத்ததை உண்டு காலம் கழித்து பலபெருமைகளைச் செய்து சுபகிருது வருடம் தை மாதம் விசாக நட்சத்திரம் அன்று தாயுமான சுவாமிகள் மகா சமாதியடைந்தார்.

அவர் பாடியருளிய சில பாடல்களைப் பார்ப்போம். ஆனந்தகளிப்பு! பாடலில்,

சொன்னசொல் ஏதென்று சொல்வேன் என்னைச்
சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி
முன்னிலை ஏதுமில்லாதே சுகம்
முற்றச்செய் தேஎனைப் பற்றிக் கொண்டாண்டி

என்பார்.

சும்மா இரு என்ற மந்திரத்தின் பெருமையை விளக்குகிறார். குருவினுடைய பற்றுதலால் ஏற்பட்ட இன்பத்தைப் புலப்படுத்துகின்றார் தாயுமானவர்.

பற்றறிய பற்றற உள்ளே - தன்னைப்
பற்றச்சொன்னான் பற்றிப் பார்த்த இடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்
பேசாத காரியம் பேசினான் தோழி

பேசா இடும்பைகள் பேசிச் - சுத்தப்
பேயங்கம் ஆக பிதற்றித் திரிந்தேன்.
ஆசா பிசாசைத் துரத்தி - ஐயன்
அடியிணைக் கீழே அடக்கிக் கொண்டாண்டி

அடக்கிப் புலனைப் பிரித்தே அவன்
ஆகிய மேனியில் அன்பை வளர்த்தேன்
மடக்கிக்கொண்டான் என்னைத் தன்னுள் - சற்றும்
வாய்பேசா வண்ணம் மரபும் செய்தாண்டி

இப்படி பல்வேறு நிலைகளாக ஆசை, கன்மம், மாயை, துக்கம், தீமை, நன்மை, முக்தி என்ற வகையில் பாடி இறவா புகழடைந்த தாயுமான சுவாமிகளின் பாடல்களை படித்தும் பாடியும் பரவசம் அடைவோமாக.

# நூல் மதிப்புரை

**- நிறைமதி**

**நூல் பெயர் : கவிதைக்கும் கண்கள் உண்டோ?**
**நூலாசிரியர் : கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்**
**நூல்வெளியீடு : பூம்புகார் பதிப்பகம்**
**63, பிரகாசம் சாலை (பிராட்வே)**
**சென்னை - 600 108.**
**பக்கங்கள் : 96**
**நூலின் விலை : ரூ. 36**

சங்க காலக் கவிஞரான ஒக்கூர் மாசாத்தியார் பிறந்த ''ஒக்கூர்'' (புதுக்கோட்டை மாவட்டம்) என்ற ஊரில் பிறந்துள்ள கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம் அவர்கள் நம் ''திருக்கோயில்'' இதழிலும் 'அமுதசுரபி' 'இலக்கிய பீடம்' முதலான இதழ்களிலும் வெளியாகியுள்ள இவரது ஆன்மீகக் கவிதைகளைத் தொகுத்து நேர்த்தியான அச்சில் நூலாக வெளியிட்டிருப்பது பாராட்டிற்குரியது.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இந்நூலை நன்கு ஆய்வு செய்து, சிறந்ததொரு சிறப்புரையையும் வழங்கியுள்ளார். அவர்தம் சிறப்புரையில் ''கவிஞரின் நன்னம்பிக்கை நோக்கக் கவிதைகள், கவிதை உள்ளத்தோடு படிப்பவர்க்குச்சுவை பயக்கும். பன்முக நோக்கில் நிரம்பப் படித்து, நிரம்ப அனுபவமும் பெற்ற கவிஞர் சொக்கலிங்கம் பல நாடுகளுக்குப் பயணம் செய்து, பல பண்பாடுகளைக் கண்டறிந்தவர்; பல தமிழ் அறிஞர்களோடு தொடர்பு கொண்டவர்; பொறுப்பான பதவிகளில் இருந்தவர்; கவிதை வடிவில் இவர் வழங்கியுள்ள செய்திகள் எல்லோருக்கும் பயன்படும் .... தனிமனித உறவு நோக்கிலும் உலக அமைதி நோக்கிலும், ஆண் பெண் உறவு நோக்கிலும், பக்தி நோக்கிலும், சமுதாய மேம்பாட்டு நோக்கிலும், இவர் நெஞ்சில் மலர்ந்த சிந்தனைப் பூக்கள் கவிதை மணம் பரப்பி இப்போது நூல் வடிவில் வெளிப்பட்டிருக்கின்றன''

என்று நுண்மாண் நுழைபுலம் மிக்க டாக்டர் பொற்கோ அவர்கள் இந்நூலைச் சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

''சரவண பவஓம் சரவண பவஓம்
தாரக மந்திரம் தவறாது சொன்னேன்
பரம பதம்தர பழநி மலையன்
பரவும் மயிலேறிப் பறந்தே வந்தான்
கரமது குவிய சிரமதைத் தாழ்த்தி
கருத்தை நிறுத்திக் கந்தா வாவென
சரணம் சரணம் சரணமே என்றேன்
சண்முகம் என்மனம் தாங்கிக் கொண்டானே''
(பக். 15)

என முருகபக்தியில் திளைக்கும் கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம் அவர்கள், நாராயண பக்தியிலும் திளைத்து

''நான் காணும் காட்சி எலாம் நாராயணா
நன்மை யன்றி தீமையில்லை நாராயணா
ஊன்இருந்தும் நோயில்லை நாராயணா
உண்மை யன்றிப் பொய்மையில்லை நாராயணா
அன்பொன்றால் அரசாளும் நாராயணா
அருள்ஒன்றால் வளமளிக்கும் நாராயணா
இன்ப மின்றித் துன்பமில்லை நாராயணா
இவ்வுலகைச் சொர்க்கமாக்கும் நாராயணா''
(பக். 48)

என்று பாடியிருப்பது சமயசமரச உணர்வையும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற ஒப்பற்ற தத்துவத்தையும் நன்கு வலியுறுத்துகின்றது.


இக்கவிதை நூலின் சாராம்சம் எது என்று வினவுவார்க்கு ''உலக ஒருமைப்பாடே'' என்று கூறும் வகையில்

''உலகமெலாம் ஒருநாடே
ஓரினமே மனிதரெலாம்
உலகமெலாம் ஒரே உரிமை
ஒற்றுமையில் கடமை ஒன்றே
உலகமெலாம் மனித நேயம்
ஒன்றுபட்ட ஒருமைப் பாடு
உலகமெலகம் ஒருலகாய்
ஒன்றுபட்டால் அமைதி உண்டே'' (பக். 81)


என ஆக்கியுள்ள கவிதை வழி அனைத்து மக்களும் உலக அமைதியை வேண்டி, ஒன்றுபட்டு ஒருமித்த சமரச உணர்வோடு வாழ முற்படல் வேண்டும்.

''நன்மைகளைத் தொடர்ந்து செய்தால்
நல்வினைகள் நலம்பயக்கும்
நன்மை தீமை மாறிச் செய்ய
நலிவும் மலிவும் மாறிவரும்
உண்மை இதை உணர்ந்துவிட்டால்
உலகம் இங்கே சொர்க்கம் ஆகும்
உலகை விட்டுச் சொர்க்கம் தேடும்
ஒருவழியும் இங்கிலையே'' (பக். 96)

என்று உலகத்தையே சொர்க்கமாக்கி, நாம் எல்லோரும் சொர்க்க வாழ்வு வாழ வழிகாட்டும் கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல், ஒரு நன்னூல் என்பதும், இதனை அனைவரும் வாங்கிப் பயன்பெற வேண்டும் என்பதும் என் உள்ளக் கிடக்கை. ★★



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் இசைக்கலைஞர் மற்றும் காவலர் குடியிருப்பு திறந்து வைத்தல், திருமண மண்டபம் கால்கோள் விழா, கருமாரி தங்கும் விடுதி புதுப்பிக்கும் விழா மற்றும் கடைநிலை ஊழியர் குடியிருப்பு விரிவாக்கப்பணி துவக்க விழா திருக்கோயில் இணையதள தொடக்க விழா ஆகியவை 5.12.2001 அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.சி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில் நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன், பி.காம்., பி.எல். அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத்துறை அரசுச் செயலர் திருமிகு பி.ஏ. இராமய்யா, இ.ஆ.ப. அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு பி. சிவசங்கரன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்ஸி., பி.எல். அவர்களும், திருக்கோயில் இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் இசைக்கலைஞர் மற்றும் காவலர் குடியிருப்பு திறந்து வைத்தல், திருமண மண்டபம் கால்கோள் விழா, கருமாரி தங்கும் விடுதி புதுப்பிக்கும் விழா மற்றும் கடைநிலை ஊழியர் குடியிருப்பு விரிவாக்கப் பணி துவக்க விழா திருக்கோயில் இணையதள தொடக்க விழா ஆகியவை 5.12.2001 அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.சி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில் நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன், பி.காம்., பி.எல். அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத் துறை அரசு[illegible]பலர் திருமிகு பி.ஏ. இராமய்யா, இ.ஆ.ப. அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு பி. சிவசங்கரன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்ஸி., பி.எல். அவர்களும், திருக்கோயில் இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.